866

866
2-59
3417

குமரி மலர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 MAY 1959
MADRAS

பதிப்பாசிரியர்

ஏ.கே.செட்டியார்

50 காசு

The India Leather Corporation Ltd.

PREMIER EXPORTERS OF
E. I. TANNED HIDES, KIPS & SKINS

- Kips (Cow Hides)
- Cowcalf Skins
- Buffalo Hides
- Buffcalf Skins
- Goat Skins
- Sheep Skins

9, DAVIDSON STREET
G. P. O. BOX - 1516
MADRAS - 1

தி இந்தியா லெதர் கார்ப்பொரேஷன் லிமிடெட்

9. டேவிட்ஸன் தெரு
தபால் பெட்டி — 1516
சென்னை - 1

Phone 4491:
2059

Grams: "TANDRIGHT"

பொரபுதூரிலுள்ள தியான புத்தர்.

எம். கே. கிருஷ்ண செட்டியார்

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்.

ANNOUNCEMENT.



"TEXTOOL"

**TAKES PRIDE TO ANNOUNCE
THAT THEIR 4 CYLINDER
36 To 86 H. P.
AUTOMOTIVE DIESEL ENGINES**

will be out in the market Soon!!
Await Further News !!!

MANUFACTURERS:-

Textool Company Limited,

Post Box No. 221,

COIMBATORE.

**Phone: 409
1409**

**Gram:
'TEXTOLCO'**

VUMMIDI
RAMIAH CHETTY
GURUSWAMY CHETTY & CO.,
JEWELLERS
23-25, CHINA BAZAAR ROAD
MADRAS

மலர் 16 இதழ் 2

விகாரி - வைகாசி

உள்ளுறை

பக்கம்

1. உள்ளடங்கிய தெய்வத் தன்மை
—சுவாமி பரமானந்தர் 1
2. மகாத்மா காந்தி யார்?
—செஸ்டர் பௌல்ஸ் 5
3. காந்தியடிகள் இயல்பு
—துளசி மேஹர் 8
4. ரொட்டியின் கதை 15
5. அமெரிக்க நூலகம்
—ஜான் டீ. ரிட் 17
6. கங்கைப் பாலம் 23
7. குற்றமிழைத்தோருக்கு நல்வாழ்வு 28
8. கொய்த மலர்கள் 32
9. தொழில்-நுட்பப் பொருட்காட்சிச்சாலை 46
10. பிரபஞ்ச ரகசியம்
—ராஜாஜி 52
11. கல்வித் துறையில் கூட்டுறவு
—ராப் மான்ஸ்பீல்டு 56
12. டில்லியில் பறவை வாழ்க்கை
—மால்கம் மக்டொனால்டு 59
13 என் வாழ்க்கைத் தத்துவம்
—ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் 63
14. தலாய் லாமா 70
15. கோழிப் பண்ணை 78

உள்ளடங்கிய தெய்வத் தன்மை

சுவாமி பரமாநந்தர்

"மனம் போலே வாழ்வு" என்பது முதுமொழி. மெய்ப்பொருளை அடைய வேண்டுமானாலும், யாதேனும் ஒரு கொள்கையைப் பின்பற்றி ஒழுக வேண்டுமானாலும், நாம் முழு மனத்தோடும், இடைவிடாதும் அதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டேயிருக்கவேண்டும்.

"மனிதனே! நீ எதைப் பற்றிச் சிந்தனை செய்கிருயோ நீ அதுவாக மாறிவிடத்தான் வேண்டும்; கடவுளை நினைத்தால் கடவுளாவாய், மண்ணை நினைத்து வந்தால் மண்ணுவாய்" என்றார் ஒரு கவி. மனிதன் தனது விதியை அடக்குவதற்குரிய ஒரு வழி, அனுபவத்திலே கொண்டுவருவதற்குரிய ஒரு விதி இதிலே போதிக்கப் பெற்றுள்ளது.

தாழ்ந்த படியிலுள்ள வாழ்க்கையோடு சம்பந்தப் படுத்திக் கொண்டே காலம் கழிப்பவன், உயர்ந்த பரிசுத்த மான வாழ்வை அடைய வொண்ணுது என்பது திண்ணம் அன்றோ? தாழ்ந்த நிலையைச் சார்ந்து வாழ்வதனால் ஒருவனது மனம் அழுக்கடைகிறது; அவனது நினைவுகள் கெட்டுப் போகின்றன; அவன் சக்தியை இழந்துவிடுகிருன்; ஆனால், உயர்ந்த வாழ்வோடு சம்பந்தம் கொள்ளுதல் அவனை மேன்மைப் படுத்துகிறது; அவனது உணர்வை உயர்த்துகிறது; ஞான வாழ்வுக்குக் கிட்டத் தட்ட சமமான ஒரு வாழ்வோடு உறவு கொள்ளும்படி செய்கிறது.

எந்தக் கோயிலோ, தீர்த்தமோ, புண்ணியத் தலமோ தன்னளவிலே மனிதனைத் திருத்தி உயர்வாக்கமுடியாது. அது கூடுமானால், அது மாதிரியாக நம்மை மாற்றும் இடத்திற்குச் செல்லும் பொருட்டு நாம் அனைவரும் ஒரு கப்பலையோ, ரயிலையோ, விமானத்தையோ வாடகைக்கு அமர்த்திக்கொண்டு விடலாம். நம்மைப் பாதுகாக்க ஒரு கொள்கையோ, நம்பிக்கையோ உள்ளதாதலின், நாம் உள்ளத்திலே இறைவனை எழுந்தருளப் பண்ணவேண்டிய அவசியம் இல்லையென்று சில சமயம் நம்மவரில் சிலர் கருதுகிறோம். மதத்தை மேலெழுந்தவாரியாக ஒப்புக் கொள்வதினாலே மட்டும் மெய்ஞ்ஞான அனுபூதி மலையிலே சிறிது உயரங்கூட மேற்செல்ல வழியில்லை என்பது உறுதி.

''அடைதற்குரிய எல்லைக் கடங்காத பரம்பொருள் ஒவ்வொரு மனிதனது நெஞ்சிலும் வாழ்கின்றது. உடல் ஒரு கோயில், இறைவன் வாழுமிடம்; அதற்குள்ளே அவர் தமது நித்தியமான பேரொளி விளக்கை ஏற்றி வைத்துள்ளார்.'' இந்த உலவா இன்பச் சுடரில் நாம் நம்பிக்கையை இழந்து தோல்வியடைவதே நமக்கு ஏற்பட்ட விதியென்று நம்புவதற்குக் காரணம் யாது? மனிதனது உண்மை இயல்பையும் வாழ்க்கையின் மெய்யான தன்மையையும் அறியாமையே காரணம் எனப் பெரியார் நமக்குக் கூறியுள்ளனர். பொருள் பொங்கி வழிந்து கொண்டிருந்த இயேசுநாதர் அறியாமையிலும், அவநம்பிக்கையிலும் மூழ்கிக் கொண்டிருந்த மக்களை அணுகிய போது, அவர் தமது ஞான ஆற்றலால் அம்மக்களின் உள்ளத்திருந்த தெய்வாம்சத்தைத் தூண்டியெழுப்பி வளரச் செய்ய வல்லவரானார். அதுவே அவர் உலகிற்களித்த மிகப் பெருங் கொடை. எங்குப் பிறப்பினும் எப்படி

வாழினும் பெரியார் ஒருவர் அளிக்கக்கூடிய மிகப் பெரு நற்கொடை அதுவேயாகும்.

நாம் ஒளிக்கும் இருளுக்குமிடையே ஊசலாடிக் கொண்டிருக்கிறோம். இதன் உண்மையை நீங்கள் அறிவீர்கள். ஒரு நாள் காலை விழித்தெழும்போது, மனம் சோர்வடைந்து பாரம் அழுத்துவது போல் எழுந்திருக்கிறீர்கள்; எதிலும் ஆனந்தமோ உள்ளக் கிளர்ச்சியோ இன்றியிருப்பதாக உணர்கிறீர்கள்; எந்த இடையூறுகள் குறுக்கிட்டாலும் அவை வெல்ல அரிதாகத் தோன்றுகின்றன; உங்களுடைய தொழில் முறையிலோ, அற்பமான வீட்டு வேலையிலோ எந்தச் செய்கையும் சுவையற்றதாகத் தோன்றுகின்றது. மறுநாள் காலை இவையெல்லாம் மாறி விடுகின்றன. தூங்கி விழிக்கும்போதே தெய்விக ஊக்கம் உள்ளத்துத் ததும்புவதை நீங்கள் உணர்கிறீர்கள். உங்களால் செய்யக் கூடுமென நீங்கள் ஒருக்காலும் எதிர்பாராதவற்றைச் செய்து முடிப்பதைக் கண்டு நீங்களே ஆச்சரிய மடைகிறீர்கள். ஆனால் இது ஏதோ தப்பித் தவறி அபூர்வமாக நிகழ்வதொன்றுமில்லை. உங்களிடம் தெய்வத் தன்மை குடி கொண்டு உறைகின்றதே உண்மை. எவனும் தானே இந்த உண்மைகளை மெய்ப்பித்துக் கொள்ளலாம். நம் எல்லோரிடத்தும் இந்த உயர்ந்த இலட்சியங்கள் அமையாது போகலாம்; ஆனாலும் இடையிடையே அவற்றை எட்டிப்பார்த்தால் யார்க்கும் இயலும். எந்தப் பெரிய முனிவரோ, ஞானியோ, அவதார புருஷரோ ஆயினும், அவரது கருத்துக்களை வாழ்க்கையில் அனுபவமாக்கும் எண்ணமின்றிக் கிளிப்பிள்ளைகள் போலச் சொல்லுவதினால் மட்டும் எவர்தான் மகிழ்ச்சி யடைவார்.

“பரலோக ராஜ்யம் உள்ளுக்குள் இருக்கிறது” என்றார் கிறிஸ்து நாதர். சுவாமி விவேகாநந்தர் பின் வருமாறு

உபதேசித்துள்ளர்:"ஒவ்வோர் ஆன்மாவும் உள்ளடங்கிய தெய்வத் தன்மையுள்ளது. உள்ளேயும் வெளியேயும் உள்ள இயற்கையை அடக்குவதினல் இத் தெய்வத்தன்மையை வெளிப்படுத்துவதே நமது குறிப்பு. கருமத்தாலோ, பூஜையாலோ சித்த விருத்திகளை அடக்குவதாலோ தத்துவ ஆராய்ச்சியாலோ இவைகளில் ஒன்றினலோ பலவற்ருலோ எல்லாவற்ருலுமோ இதைச் செய்து முடித்து, விடுதலையை அடைக."

மதப் பிரிவுகள் பலவற்றில் இதனையோ அதனையோ சேர்த்துவிட்டதனல் மட்டும் ஒரு மனிதன் ஞானமாக வாழ்பவனுக மாட்டான். அவனது உள்முகப்பட்ட உள்ளத்தின் காட்சியினுல்தான் ஞானியாவான். மனிதனது நெஞ்சக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் பரம் பொருள் மிக்க ஒளி பொருந்தியது, மிக்க பேராற்றல் படைத்துள்ளது;அதன் துணையால்இவ்வுடல் வாழ்க்கைக் குரிய குறைகள், வரை யறைகள் இடையூறுகள் அனைத்தையும் தாண்டிச் செல்லலாம். ஆப்ரஹாம் லிங்கன் என்னும் பெரியார் இதற்கு ஓர் ஆச்சரியமான உதாரணமாவார்! முடிவற்ற எதிர்ப்புக்கும்,பகைக்கும் சந்தேகத்திற்கும் நகைப்புக்கும் அவர் எவ்வளவு ஆளாகவேண்டியிருந்தது. அவரது உடலின் தோற்றத்தையும்எள்ளிநகையாடினர். ஆயினும் இன்று அமெரிக்க நாட்டின் வீரருள் ஒருவராக அவர் போற்றப்படுவது மன்றி, உலகப் புகழ் பெற்ற பெரியாருள் ஒருவராக மதிக்கப்படுகின்ருர். ஏன்? அவர் எல்லாத் தடைகளையும் மீறி வெற்றி கொண்டார். ஆணவத்தால் தம்மை எல்லாம் வல்லவராக மதித்த இறுமாப்பினுல் அவ் வெற்றி கிட்டவில்லை. அவர் மிகப் பெரும் பணிவு கொண்டவராயிருந்தார். அவருக்கு வெற்றி யளித்தது அவரது ஆன்ம குணமே.

மகாத்மா காந்தி யார்?

செஸ்டர் பௌல்ஸ்

[காந்தியடிகளின் நினைவாக நிறுவப்பெற்றுள்ள வாஷிங்டன் ஹாவர்டு பல்கலைக் கழகத்து விரிவுரைகளில் முதலாவது விரிவுரை இது. இதனை நிகழ்த்திய ஸ்ரீ செஸ்டர் பௌல்ஸ், இந்தியாவில் அமெரிக்கத் தூதராக இருந்தவர்.]

"இந்த நூற்றாண்டில் உலகில் முற்போக்கடைந்த நாடுகள் இயந்திரங்கள் அமைப்பதிலும் பொருள் ஈட்டுவதிலும் முனைந்துள்ளன. எஃகு ஆலைகளையும், டாங்கிகளையும், விமானங்களையும், ஏவுகளையுமே நாம் ஆற்றலின் அடையாளங்களாகக்கொண்டுள்ளோம். இந்தச் சூழ்நிலையில், இவற்றிற்கு எதிராக, கருத்துக்களின் ஆற்றலை ஒரே நிலையில் இடைவிடாமல் கையாண்டு காந்திஜி இந்தியாவுக்கு விடுதலையளித்தார்.

மகாத்மா காந்தியை விடுதலை வழங்கிய தலைவராகக் கொள்வார் சிலர்; அவர் அரசியல் அறிஞர் என்பார் சிலர்; அவர் தத்துவக் கலைஞர் என்று எண்ணுவார் சிலர்; அவர் உலகப் பிரஜை என்று உரைப்பார் சிலர். இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலையில் அவரை நோக்குகின்றனர். அவர் ஒரு ஜனநாயகவாதி, ஜனநாயகத்தின் சிற்பி, உலக ஜனநாயகத்தின் தீர்க்கதரிசி. நமது குடியரசும் வேறுஎந்தக் குடியரசும் அவரை இவ்வாறு கருத வேண்டும்.

சத்தியமே கடவுள்; சத்தியத்தைத் தேடவும், காணவும் மனிதனுக்கு சக்தி இருப்பதால், அவன் சுதந்திரமாக இருக்கிறான் என்று காந்தி சொன்னார். ஜனநாயகம், அஹிம்ஸா தர்மம், தனியாள் மதிப்பு ஆகியவையெல்லாம் சத்தியத்தைப் பற்றிய அவரது கொள்கைக்கு இன்றியமையாதவை.

சத்தியத்தைப்பற்றிய நம்பிக்கையே இந்த ஜனநாயகக் கொள்கைக்கு ஆதாரம். அமைதியைவிட சத்தியமே முக்கியம்; ஹிம்ஸையைவிடக் கோழைத்தனமே அதிகமாக வெறுக்கத் தகுந்தது என்று காந்தி சொன்னார்.

அவரது கொள்கை வெறும் சாத்வீகக் கொள்கை அல்ல. ஆதலால்தான் அவர் 'சாத்வீக எதிர்ப்பு' என்னும் சொற்றொடரை விடுத்து, 'சத்தியாகிரகம்' என்னும் சொல்லை வழங்கினார். சத்தியாகிரகம் என்பது உண்மையைக் கடைப்பிடித்தலாகும். காந்தியின் கொள்கை நமது உரிமைகள் சாசனத்துக்கு, அதாவது தனியாள் தன் கருத்தை சுதந்திரமாய்த் தெரிவிக்க வேண்டியது அவசியம் என்பதற்கு உறுதியான அடிப்படை அளிக்கக் கூடும். சத்தியமே நாம் அடைய விரும்புவது; ஆதலால் சத்தியத்தைப் பற்றி யார் என்ன சொன்னாலும் நாம் அதைக் கேட்க வேண்டும்.

அவ்வாறே, காந்தியின் அஹிம்ஸா தர்மமும் அமெரிக்க மக்களுக்கும், இருபதாம் நூற்றாண்டில் வாழும் யாவருக்கும் விசேஷ பொருள் பொதிந்த உண்மையாகும்.

தன் பகைவனைத் திருத்த விரும்புவோன் தான் வருந்த வேண்டும். பிறரைத் துன்புறுத்துவதைவிடத் தான் துன்பப்படுவதே ஆற்றல்மிக்கது என்பது காந்திஜியின் எண்ணம்.

இந்தியாவிலுள்ள பலவகை நிலைமையிலுள்ள மக்களும் காந்திஜியின் கருத்துக்களைப் போற்றுகின்றனர். அஹிம்சை முறை எதிர்ப்பை காந்தி முதன் முதல் கையாண்ட ஆப்பிரிக்காவிலும் மக்கள் இன்னும் காந்தீய முறைகளைத் தழுவ முயல்கின்றனர். அமெரிக்காவில் இன வேற்றுமையை ஒழிப்பதற்கு மார்ட்டின் லூதர் கிங் காந்தீய நெறியைக் கடைபிடிப்பதையும் குறிப்பிட வேண்டும்,

கருத்துக்களின் ஆற்றலால் மக்கள் வரலாற்றை மாற்றலாம் என்பதைத் தம் வாழ்க்கையில் காட்டியவர் மகாத்மா காந்தி. ஆதலால், அவரே இந்த நூற்றாண்டின் இணையற்ற பெரியாராக விளங்கலாம்.

உலக ஜனத் தொகை

தற்பொழுது உலக ஜனத்தொகை சுமார் 280 கோடி என்று ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை ஒன்று கூறுகிறது. ஒன்பது வருஷங்களுக்கு முன் உலக ஜனத் தொகை சுமார் 250 கோடிதான்.

ருஷ்யர் நீங்கலாக ஆசியாவின் ஜனத் தொகை 156 கோடி; அதாவது உலக ஜனத் தொகையில் 56 சதவிகிதம். ஐரோப்பாவின் ஜனத் தொகை சுமார் 41 கோடி.

காந்தியடிகள் இயல்பு

துளசி மோஹர்

காந்தியடிகள் எப்பொழுதுமே தம் வேலைகளில் ஆழ்ந்திருப்பார். வீட்டில் எப்படியோ அப்படியேதான் யாத்திரையிலும். அவர் சபர்மதி ஆசிரமத்தில் இருந்த காலத்தில் இரவிலும் பகலிலும் கடிதங்கள் எழுதுவதும், வருகிறவர்களைக் கண்டு பேசுவதும், வாக்குவாதங்கள் நடத்துவதுமாகவே இருப்பார். தூங்குவதற்காகப் படுக்கையில் படுத்த பிறகும் தம் துன்பங்களை சொல்லும் பொருட்டு அனுமதி பெற்று எவரேனும் வந்து சேர்வர். இவற்றின் காரணமாக காந்தியடிகளுடன் பேசுவதற்கு கஸ்தூரி பாவுக்குச் சந்தர்ப்பமே கிடைப்பதில்லை. இந் நிலையில் ஒரு நாள் சமயம் பார்த்து "உங்களுடன் பேசுவதற்கு நீங்கள் எனக்கு நேரமே அளிப்பதில்லையே. இது உசிதமா?" என்று கஸ்தூரிபா காந்தியடிகளைக் கேட்டே விட்டார்.

அதைக் கேட்ட காந்தியடிகள் அது முதல் தாம் எங்கிருந்த போதிலும் தலையில் வாதாம் எண்ணெயைத் தூங்குவதற்கு முன் கஸ்தூரிபாவேதான் தேய்க்கவேண்டுமென்றும், அவ்வாறு தேய்க்கும்பொழுது தம்மிடம் பேசவேண்டியவற்றைப் பேசலாம் என்றும் ஏற்பாடு செய்தார்.

அது முதல் அந்த சமயம் மட்டும் வேறு எவருக்கும் பாபுவுடன் பேசும் சந்தர்ப்பம் அளிக்கப் பெறவில்லை,

காலில் மட்டும் வேறு யாரோ, எப்பொழுதும் போல் எண்ணெய் தேய்த்து வந்தார்கள். தலையில் எண்ணெய் தேய்க்கும் அந்தச் சமயம் எப்படிப்பட்டதென்றால், நாள் முழுதும் ஓயாது வேலை செய்த பாபு அப்பொழுது தூங்குவதற்குத் தயாராய் இருப்பார். ஆகையால் பல சமயங்களில் பா தலையில் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருக்கும் பொழுதே பாபு தூங்கிப் போய் விடுவார். பாவம், பாபு தாம் சொல்லுவதைக் கேட்பதாக எண்ணிக் கொண்டு சொல்லிக்கொண்டே இருப்பதுமுண்டு. தூங்குவது தெரிந்து பேச்சை அரைகுறையாக நிறுத்தி விட்டு எழுந்து வந்து விடுவதுமுண்டு.

பாவுக்கும் சமையல் அறை வேலைகளும் விருந்தினர் கவனிப்பும் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்குமாகையால், சில சமயங்களில் பாபுவுக்குப் பணிவிடை செய்யப் போக முடியாதென்று தோன்றும் பொழுது, அருகிலுள்ள வேறு எவரையேனும் அனுப்பி வைப்பதுண்டு. பா போகச் சொல்லாத வரையில் எவரும் பாவுக்கு 'மாலிஷ், முதலிய பணிவிடைகள் செய்வதற்குப் போகத் துணிந்ததில்லை.

1924 ஆம் ஆண்டு ஒரு நாள் இரவு. எல்லோரும் தூங்கிப் போய்விட்டார்கள். பாபு தூங்குவதற்காக ஒற்றத்தில் கட்டிலில் படுத்திருந்தார். நான் அவர் கால்களை பிடித்து விட்டுக் கொண்டிருந்தேன். பா இன்னும் வரவில்லை. சமையலறையில் ஏதோ வேலை செய்து கொண்டிருப்பதாகத் தோன்றிற்று. நேரம் அதிகமாகி விட்டது. எங்கும் ஒரே நிசப்தம். இதற்கிடையில் பா வந்து மாலிஷ் செய்யத் துவங்கினார்.

பாபு மெதுவாக, "பா வந்து விட்டாளா?" என்று கேட்டார்,

பாபு:- இன்று ஏன் இவ்வளவு நேரம்? சமையல் அறையில் உன் சத்தம் வெகுநேரமாகக் கேட்டுக் கொண்டே இருந்தது. உனக்கு நேரமில்லை என்ருல் வேறு எவரையாவது வரச் சொல்லக் கூடாதா?

பா:- எல்லோருக்கும் சாப்பாடு செய்வித்து நானும் சாப்பிட்டு, பாத்திரங்கள் தேய்த்து, அறையையும் கழுவினேன். பிறகு ராம்தாஸ் பம்பாய்க்குப் போவதால் வழியில் சாப்பிடுவதற்கும் பம்பாயில் இரண்டு மூன்று நாள் பலகாரத்திற்கும் தயார் செய்தேன். இதனுல் சிறிது நேரமாகி விட்டது. வேலையில் பொழுது போனதே தெரியவில்லை. இங்கே அனுப்பத் தகுந்தவராக எவரையும் காணவுமில்லை.

பாபு:- உனக்கு வேலை மிகவும் அதிகமாக இருக்கிறது. எவ்வளவு நாட்கள் வரையில்தான் நீ இவை எல்லாவற்றையும் சமாளிக்க முடியும்? எனக்கு குளிப்பதற்கும், சாப்பிடுவதற்கும் ஏற்பாடு செய்கிருய். விருந்தினர்களும் அடிக்கடி யாராவது வந்து கொண்டிருப்பதால், அவர்களைக் கவனிக்கவேண்டிய பொறுப்பும் உன்னுடையதாகவே இருக்கிறது. ஆசிரமத்தில் உள்ளவர்களைப் பார்த்து விசாரித்து, வேண்டியதைச் செய்வதோடு, உன் துணிக்கு வேண்டிய நூலும் நூற்ருக வேண்டியிருக்கிறது. இவ்வளவு செய்வதற்கு உனக்கு எப்படி நேரம் கிடைக்கிறது என்பதை எண்ணி எண்ணி நான் வியக்கிறேன். இவ்வளவு வேலைகள் இருந்தும், ராம்தாஸ் பம்பாய் போகிருன் என்று அவனுக்கு வேண்டிய ஆகாரங்களைத் தயாரிக்கிருய். இவ்வளவையும் எவ்வளவு காலத்திற்குத் தான் உன்னுல் செய்து வர முடியும்? நாளைக்கு ராம் தாஸ் பம்பாய்க்குப் போகிருன் என்னுல் மறுநாள்

துளஸி நேபாளத்திற்கும், அடுத்த நாள் சுரேந்திரன் டில்லிக்கும் போகிருர்கள். இவ்வாறு ஆசிரமம் என்ருல் ஒவ்வொரு நாளும் எவரேனும் ஒருவர் ஓர் ஊருக்குப் போய்க் கொண்டு தான் இருப்பார்கள். ஒவ்வொருவருக்கும் வழியில்சாப்பிடுவதற்கு ஆகாரம் தயாரித்துக் கொடுப்பதென்ருல் உன்னுல் சாத்தியப்படுமா?

பா:- முடியாதுதான். ஆனுல் ராம்தாஸ் என் பிள்ளை அல்லவா? இதனுலேயே சிறிது நேரம் ஆனுலும் ஆகட்டும் என்று, உங்களுக்கு மாலிஷ் செய்வதையும் நிறுத்திவிட்டு, அவனுக்குப் பிரியமான உணவைத் தயாரித்துக் கொடுத்தேன். ஒவ்வொரு சமயமும் ஆசிரம வாசிகள் அனைவர்க்கும், அவரவர்க்குப் பிடித்தமான ஆகாரத்தை என்னுல் எப்படித் தயாரித்துக் கொடுக்க முடியும்? நீங்களோ மகாத்மா. இதனுல் வெளியூரிலிருந்து வருகிறவர்கள் எல்லோரும் உங்களுக்குப் பிள்ளைகள். ஆனுல் நான் மகாத்மா ஆகிவிடவில்லையே! இதிலிருந்து ஆசிரம வாசிகளிடம் எனக்கு அன்பில்லை என்று கருத வேண்டாம். ஆனுல் எல்லோரையும் என் சொந்தப் பிள்ளையைப் போல நான் எப்படி எண்ணிக் கொள்ள முடியும்? நீங்கள் எப்பொழுதும் சிறு சிறு விஷயங்களுக்காகவும் என்னைக் கடுமைப்படுத்துகிறீர்கள். என் பிரியமான பிள்ளைக்குத் திருப்தி யாகும்படி சில தின்பண்டங்கள் தயாரித்துக் கொடுப்பதும் ஒரு குற்றமா?

பாபு:- சரி,இது ஆலோசிக்க வேண்டிய விஷயம். நல்லது, இப்பொழுது நாம் எங்கே உட்கார்ந்திருக்கிறோம்.

பா:- சபர்மதி சத்தியாக்கிரக ஆசிரமத்தில்.

பாபு:- நாம் ராஜ்கோட்டிலிருந்த சொந்த வீடு வாசலை விட்டு இங்கே எதற்காக வந்து உட்கார்ந்திருக்கிறோம்?

பா:- சகோதர சகோதரிகள் ஆகிய நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து,உண்மை வழி நடந்து,நாட்டுப்பணி செய்வதற்காக.

பாபு:- இங்கே ஆசிரமத்தில் வெகு தொலைவில் இருந்தெல்லாம், தம் தாய் தந்தையரை விட்டு வந்து வசிக்கும் சகோதர சகோதரிகள் தம்மைப் பெற்ற தாய் தந்தையரை விட நம்மைக் குறைவாகவா நேசிக்கிறார்கள்?

பா:- இல்லை. ஆசிரமத்திலுள்ள அத்தனைபேரும் நம்மைத் தாய் தந்தையரைக் காட்டிலும் அதிகமாகவே கருதுகிறார்கள். உங்களிடம் அவர்களுச்குள்ள மட்டற்ற பக்தியினாலேயே அவர்கள் தம் உற்றார், உறவினர்களையும், பெற்றோரையும், வீடு வாசலையும் துறந்து இங்கே வந்திருக்கிறார்கள். அவர்கள் உங்களிடம் பயிற்சி பெற்று, தேசத்தின் பல பகுதிகளுக்கும் போய் தம்மால் முடிந்தசேவை செய்யப் போகிறார்கள்.

பாபு:- அப்படியானால் நம்முடைய கடமை என்னவென்று நீயே யோசித்துப் பார். எல்லாத் தாய் மார்களுக்கும் தம்குழந்தைகள் என்றால் அடங்கா அன்பு இருப்பது இயற்கை. ஆகையால் ராம்நாஸை நீ அதிகமாக நேசிக்கிறாய். எனக்கு இது புரியாத தல்ல. நாம் ராஜ்கோட்டில் வீட்டில் இருந்திருப்போமானால் நம்முடைய சொத்திலும் அன்பிலும் ராம்தாஸ், தேவதாஸ் முதலிய நம் பிள்ளைகளுக்குப் பங்கு கிடைக்கும்.

வேறு எவரையும் நீ இவர்களுக்குச் சமமாக அப் பொழுது எண்ணுதிருந்தாலும் பாதகம் ஒன்றும் ஏற்படாது. ஆனால் இந்த ஆசிரமமோ சத்தியாக் கிரகத் தொண்டர்கள் அனைவருக்கும் சொந்தம். ஆகையால், இங்கே மற்றவர்கள் எப்படியோ, அப் படியேதான் ராம்தாஸும் இருந்துவர வேண்டும். உன்னைத் தம் தாயைவிட நல்லவள் என்று கருது கிறவர்களை நீ ராம்தாஸைவிடக் குறைவாக எப்படி மதிக்கலாம்? இன்று நாம் இருந்துவரும் ஆசிர மத்தை உலகமே கவனித்து வருகிறது. எல்லோரும் இதனிடம் பெரிய விஷயங்களை எதிர்பார்க்கிறார்கள். இங்கே எப்பொழுது என்ன நடக்கிற தென்று ஆவலோடு கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரமத்தினிடம் மக்களுக்கு உள்ள இந்த நல் லுணர்ச்சியினால் நமது பொறுப்பு எவ்வளவு அதிக மாகி விட்டதென்று தெரியுமா?

பா:- ஆம். நீங்கள் சொல்லுவதெல்லாம் சரி. ஆனால் நான் நினைத்த மாத்திரத்தில் நீங்கள் விரும்பும் அளவுக்கு மனத்தைப் பக்குவப்படுத்திக் கொள்வது எப்படி சாத்தியம்? எங்கே எது கிடைக்கிறதோ அதைக் கொண்டு காரியத்தை நடத்திக் கொண்டு போக ராம்தாஸுக்கும் இன்னும்அவ்வளவு பழக்கம் போதாது. மற்றஆசிரம வாசிகளோ ஓரளவு பழக்கம் பெற்று விட்டார்கள். ஆகையால் அவன் விரும்பும் பண்டங்களைச் செய்து அனுப்புவதைப் போல் ஒவ் வொரு வருக்கும் செய்து அனுப்புதல் எப்படி சாத் தியம்? ஆனால் வெளியில் சாப்பிடாதவருக்கும், உடல் நலமில்லாத வருக்கும் என்னிடமுள்ளதை, பழமோ, வெல்லமோ, நான் அனுப்பிக் கொண்டு தான் வருகிறேன்.

பாபு:- நீ செய்வது தான் சரி, அப்படித்தான் செய்ய வேண்டும். நேரம் மிகவும் அதிகமாகி விட்டது. இனித் தூங்க வேண்டும்.

பா:- நல்லது நீங்கள் தூங்குங்கள். நான் இன்னும், இன்று நூற்க வேண்டிய நூல் நூற்கவில்லை. அதை நூற்று விட்டுத் தூங்கப் போகிறேன்.

பயம்

பயந்துகொண்டிருக்கும் கோழைகள் ஒழுக்க முள்ளவர்களாக இருக்கமுடியாது. பயமின்மை என்றால் என்ன? வெளித் தோற்றத்திற்குப் பயமானவையாக உள்ளவற்றிற்குப் பயப்படாதிருத்தலே. அதாவது நோய்களுக்கோ சரீரத்துக்கோ அபாயம் அல்லது மரணம் ஏற்படும் என்பதற்கோ பயப்படக் கூடாது. தன் உடைமைகளையும், தனக்கு மிக நெருங்கியவர்களாக உள்ளவர்களையும், தன் புகழையும் இழந்து விடுவதற்காகப் பயப்படக்கூடாது. பிறருக்கு மனக்கஷ்டம் ஏற்படுமே என்று கருதியும் செய்ய வேண்டியதைச் செய்யப் பயப்படக்கூடாது.

—காந்தியடிகள்

ரொட்டியின் கதை

உணவின்றி உயிர்வாழ முடியாது. தானிய உணவே மனிதனின் முக்கியமான உணவாக இருந்து வருகிறது. ஏதேனும் ஒரு தானியத்தை முதன்மையான உணவாகக் கொண்டு மக்கள் உயிர் வாழ்கின்றனர். நெல்லை அரிசி யாக்கி உண்பார் சிலர்; கோதுமையை மாவாக்கி உண்பார் சிலர். கம்பும், சோளமும், ஓட்ஸூம், பார்லியும் பலருக்கு உணவாக உள்ளன.

மிகப் பழங்காலத்தில் தானியத்தை நெருப்பில் சுட்டுச் சாப்பிட்டார்கள்; தட்டையான கல்லில் வைத்து, சமைத்துச் சாப்பிட்டார்கள்; இடித்துத் தண்ணீர் சேர்த்து சமைத்து உண்டார்கள்.

மாவைத் தண்ணீரில் பிசைந்து சூரிய வெப்பத்தில் வைத்தால், மாவு விரிந்து உப்பும் என்பதை முதன் முத லில் கண்டு பிடித்தவர்கள் எகிப்தியர்களே. அதை அப்ப மாகச் சுடுவதற்கு அவர்கள் ஒருவகைச் சூட்டடுப்புக் கண்டுபிடித்தார்கள். அது சூட்டைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடியது; அப்பத்தை எல்லாப் பக்கத்திலும் ஒரே விதமாக வேக வைக்கக்கூடியது.

அந்த முறை மற்ற நாடுகளிலும் பரவியது. தானி யத்தை மாவாக அரைக்கும் கைச் சாதனங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. பிற்காலத்தில் ரொட்டி சுடுவதற்குத் தானியத்தை நல்ல மாவாக அரைக்கக்கூடிய இயந்திரங் கள் கண்டுபிடிக்கப்பட்டன.

ரொட்டி செய்யும் கலை

முதலில் வீடுகளில் ரொட்டிசெய்யும் வழக்கம் இல்லை. ரொட்டிக் கடைக் காரரே ரொட்டி செய்தனர். ரொட்டி செய்வது ஒரு கலையாயிற்று. மனங் கவரும் வடிவத்தில் ரொட்டி செய்வதில் ரொட்டிக் கடைக்காரர் ஒருவரோ டொருவர் போட்டியிட்டனர்.

ரோம் நகரில்தான் முதன் முதல் ரொட்டி சுடுவோர் சங்கம் அமைக்கப் பட்டது. அதிகமான ரொட்டிகள் உள்ளவனே பெருஞ் செல்வம் படைத்தவனாகக் கருதப் பட்டான்.

உணவின்றி ஒன்றும் நடைபெறாது. உணவே மக்கள் வாழ்க்கையின் உயிர் நிலையாக இருந்து வருகிறது. மக்கள் உடலே உணவால் அமைந்துள்ளது, உணவால் வளர்கிறது. "மக்கள் யாக்கை உணவின் பிண்டம்" "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்." உணவு கொடுத்தவர்கள். உயிர் கொடுத்தவர்கள் எனவே தானியம் வாழ்க்கைக்கு இன்றியமையாததாகிறது.

ஒரு நாட்டில் தானியம் இருந்தால், அது நாட்டின் செழுமையையும் வளத்தையும் உணர்த்தும். உண்வுப் பொருள் உள்ள நாடுகளே உலக அரசியலிலும் உயர்வு பெற்று விளங்கும்; அவற்றின் ஆற்றலே ஓங்கும்.

அமெரிக்க நூலகம்

ஜான் டீ ரிட்

சென்ற ஆண்டு இலையுதிர் காலத்தில் நான் அமெரிக்கக் காங்கிரஸ் நூல் நிலையத்தின் கீழ்நாட்டுப் பிரிவுக்குச் சென்றேன். அமெரிக்கக் காங்கிரஸ் நூல்நிலையம் அமெரிக்காவின் தேசீய நூலகம். பலவகை நூல்களும் உள்ள மிகப் பெரிய நூல் நிலையங்களில் இது ஒன்று. இந்தியாவையும் தென் ஆசியாவையும் பற்றிய ஒன்றரை லட்சம் நூல்கள் கீழ் நாட்டுப் பிரிவில் உள்ளன. உலகம் முழுவதும் உள்ள நூல்களை இந்நூலகம் திரட்டிவைத்திருக்கிறது என்பதற்கு அது ஒரு சான்று. கீழ்நாட்டுப் பிரிவில் வங்காளம், மராத்தி, உருது, நேப்பாள மொழிகளில் சிறந்த நூல்கள் உள்ளன என்று அப்பிரிவின் தலைவர் டாக்டர் ஹோராரான்ஸ் போல்மன் கூறினர்.

பத்து இந்திய மொழிகளில் வெளியாகும் 26 பத்திரிகைகளைச் சிறிய பிலிம்களாகப் பிடித்து அந்த நூலகத்தில் வைத்திருக்கிருர்கள். அவை இக்காலத்திலும் எதிர் காலத்திலும் பயன்படும்.

அமெரிக்காவிலுள்ள நூல் நிலையங்கள் வேறு பணிகளும் செய்கின்றன.

கலிபோர்னியா கவுண்டி நூல் நிலையம் செய்யும் பணியை என் இளமைக் காலத்தில் நான் நேரே அறிந்திருக்கிறேன். அந்த நூலக அதிகாரி ஒரு இளம் பெண் அந்த நூலகத்துக்குச் சுமார் இருபது கிளை நூலகங்கள்

இருந்தன. அந்த நூலக அதிகாரி என் நண்பராதலால் அவர் கிளை நூலகங்களை மேற்பார்க்கச் சென்றபோது நானும் அவரோடு சென்றிருக்கிறேன். கிளை நூலகங்கள் மிகவும் தொலையில் மலைகளிலுள்ள ஊர்களில் இருந்தன. புதிய புத்தகங்கள் தலைமை நூலகத்திலிருந்து கிளை நூலகங்களுக்கு வந்து சேர்ந்ததும், கிராமவாசிகளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு ஓர் அளவே இல்லை. அமெரிக்கக் காங்கிரஸ் நூலகத்தில் காணப்படும் புத்தக ஆர்வம் நாட்டுப் புறங்களிலும் காணப்படுகின்றது.

பல வாரங்களுக்குமுன் அமெரிக்காவில் தேசீய நூலகத் வாரம் கொண்டாடப் பட்டது. அமெரிக்காவில் சுமார் எண்ணுயிரம் இலவசப் பொது நூலகங்கள் உள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை வரிப் பணத்தால் ஆதரிக்கப்படுபவை. இவற்றுள் அநேக நூலகங்களுக்குக் கிளை நூலகங்களும், புத்தகங்கள் இரவல் கொடுக்கும் வேறு நிலையங்களும் உள்ளன. சில பெரிய நகரங்களிலும், மக்கள் தொகை குறைவாகயுள்ள இடங்களிலும் நூலக வண்டிகள் உள்ளன. அவை சிறிய நூலகங்கள் எனலாம். அவை ஊர்ஊராகச் சென்று புத்தகங்கள் வழங்குகின்றன.

இவை யெல்லாம் இந்தியாவிலுள்ள வட்டார வளர்ச்சி நூலகங்கள் போன்றவை என்று கேள்விப்படுகிறேன். அமெரிக்காவிலுள்ள கிராம நூலகங்கள் ஊர்ப் பொது மன்றங்களாக விளங்குகின்றன. அங்கு பிள்ளைகள் கூடிப் பழங்காலத்துக் கதைகளைக் கேட்கிறார்கள்; மாணவர் விசேஷ வகுப்புகளுக்கு வருகின்றனர்; பெரியவர்கள் விரிவுரைகள் கேட்கிறார்கள், கலைக் காட்சிகளைப் பார்க்கிறார்கள், பல பொருள்கள் பற்றி விவாதிக்கிறார்கள். பள்ளிக்கூடங்களையும், கலைப் பொருட்களஞ்சியங்களையும் போல, இந்த நூலகங்கள் அந்தந்த ஊரரால் நிறுவப்

பட்டு, ஆதரிக்கப்படுகின்றன. அவை பொதுக் கல்வி நிலையங்களாகத் திகழ்கின்றன. எல்லோரும் அவற்றைப் பயன்படுத்தலாம்.

அண்மையில்தான் அமெரிக்க மத்திய அரசாங்கம் பொது நூலகங்களுக்கு உதவி செய்ய முன் வந்தது. புதிய நூல் நிலையங்கள் நிறுவவும், மக்கள் தொகை குறைவாயுள்ள இடங்களின் பணியைச் செம்மையாக்கவும், நூலகப் பணி பற்றிய சட்டத்தின் கீழ்.மத்திய அரசாங்கம் ராஜ்ய அரசாங்கங்களுக்கு நிதிகளை முன்பணமாகக் கொடுத்து உதவுகின்றன.

இவையேயல்லாமல், வேறு பலவகை நூலகங்களும் உள்ளன. பள்ளிக்கூடங்களிலும் பல்கலைக் கழகங்களிலும் நூலகங்கள் உள்ளன. விசேஷ நூலகங்களும் ஏராளமாக இருக்கின்றன. விசேஷ நூலகங்களில் தென் ஆசியப் புத்தங்கள் அடங்கிய ஆம்ஸ் நூலகத்தைப் பற்றி இந்தியர் அறிய விரும்புவர். இது மினசோட்டாவில் செயின்ட் பால் என்னும் இடத்தில் உள்ளது. அதில் சுமார் முப்பதாயிரம் புத்தகங்கள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை இந்திய வரலாறு பற்றியவை.

அமெரிக்காவில் புத்தகங்கள்

அமெரிக்காவில் இப்பொழுது. அதிகமாக விற்பனையாகும் புத்தககங்களைப் பற்றி நீங்கள் எழுதினால் நன்றாயிருக்கும் என்று நண்பர் ஒருவர் என்னிடம் கூறினார்.

நன்றாயிருக்கும்; ஆனால் அது மிகவும் கஷ்டமான வேலை. 1959, மார்ச் மாதத்தில் அதிகமாக விற்பனையான புத்தகங்களின் பட்டியலை நோக்கினால் அதில் நான் பலவகைப்பட்ட புத்தங்களைக் காண்கிறேன். பொதுவாகக் கூறினால், பல்வேறு புத்தகங்களையும் படிக்கும் அளவற்ற ஆர்வம் அமெரிக்கருக்கு இருப்பதாகச் சொல்லலாம்.

நாவல்களில் முதன்மை பெற்று விளங்குவது "டாக்டர் ஷிவாகோ" கதை. போரிஸ் பாஸ்டர்நாக் என்னும் ருஷ்யர் எழுதிய சிறந்த நாவல் அது. அதன் ஆசிரியரையும் நோபல் பரிசையும் பற்றிய விவகாரம் மேற்கத்திய உலகில் அது அதிகமாக விற்பனையாவதற்குத் துணை செய்துவிட்டது. நான் வாசித்துள்ள மற்றொரு நாவல் (Around the World with auntie Mame.") அது எளிமையாகப் படிக்கக் கூடியது, இன்பமூட்டுவது. "லொலிட்டா" (Lolita) போன்ற மக்கள் விரும்பிப் படிக்கும் பல நாவல்களை நான் வாசிக்க வில்லை.

மத நூல் ஆர்வம்

நாவல் அல்லாத நூல் வகைகளில் அதிகமாக விற்பனை ஆகியிருப்பது கிறிஸ்தவத் திருமறையிலுள்ள புதிய ஏற்பாட்டின் தற்கால ஆங்கில மொழிபெயர்ப்பு. ராமாயணம் விற்பனையாவது போல,கிறிஸ்தவத் திருமறையும் பல ஆண்டுகளாக அமெரிக்காவில் அதிகமாக விற்பனையாகி வருகிறது. ஒரு புதிய மொழிபெயர்ப்புக்கு உள்ள இந்தச் செல்வாக்கு அமெரிக்காவில் மதத்தைப் பற்றிய ஆர்வம் அதிகமாகி வருவதைக் காட்டுகிறது என்று கருதுகிறேன்.

"இன்றைய அமெரிக்க உயர் நிலைப்பள்ளி" என்னும் புத்தகமும் அதிகமாக விலையாகி உள்ளது. சென்ற ஐந்து ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள கல்வி பற்றிய விவாதங்களை நிதானமாய் நன்முறையில் அது மதிப்பிடுகிறது. அது காஞன்ட் எழுதியது. சர்வதேச விவகாரங்களில் அமெரிக்கா அக்கறை கொண்டுள்ளது என்பதை "ருஷ்யாவின் முக்கிய வீதி" "தளபதி மாண்ட்கமரி பற்றிய நினைவுக் குறிப்புக்கள்" முதலியவற்றின் விற்பனை காட்டுகின்றன.

இந்தியா பற்றிய நூல்கள்

மற்ற நாடுகளைப் பற்றிய அறிய வேண்டும் என்னும் ஆர்வம் அமெரிக்கரிடையே வளர்ந்து வருகிறது. இந்தியாவைப் பற்றிய அண்மையில் வெளியான நூல்கள் அந்த ஆர்வத்தைக் காட்டுகின்றன. சில மாதங்களுக்கு முன் "ஆனை மலை" என்னும் புத்தகம் வெளியாயிற்று. ராபின் வைட் என்பவர் எழுதிய நாவல் அது. அதுவும் அதிகமாக விற்பனையாகும் புத்தகம். அது பெரிய நாவல் அல்ல. எனினும், இந்திய அமெரிக்க உறவுகளில் ஒரு சிறு நிகழ்ச்சியை அது கூறுகிறது; நிகழ்ச்சி சிறிதேயாயினும் நுட்பமாக உரைக்கப்பட்டுள்ளது. 1959ஆம் ஆண்டுக்குரிய ஹார்ப்பர் பரிசு அதற்கு வழங்கப்பட்டது.

இந்தியாவைப் பற்றி அதை விடப் பொதுவாக எடுத்துரைக்கும் புத்தகம் "இலையும் தீக் கொழுந்தும்" என்பது. அதனை எழுதியவர் மார்கரட் பார்ட்டன் அம்மையார். அவர் ஐந்து ஆண்டுகள் இந்தியாவில் "நியூயார்க் ஹெரால்ட் டிரிப்யூன்" பத்திரிகையின் நிருபராக இருந்தவர். "அது சுவைப்பதற்கும் சிந்திப்பதற்கும் மீண்டும் எடுத்துப் படிப்பதற்கும் உரிய புத்தகம்" என்று அமெரிக்க விமர்சகர் ஒருவர் அதைப்பற்றிக் கூறுகிறார்.

பழமையும் புதுமையும் ஒரே காலத்தில் காணப்படும் நாடு இந்தியா என்று அந்த நூலாசிரியர் கூறுகிறார். தமக்கு அப்பாற்பட்ட ஒன்றைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்துவிடும் பண்புள்ளவர்கள் இந்தியர் என்று அவர் கூறுகிறார். மிஸ் பார்ட்டனுக்கு இந்திய அநுபவம் உண்டு. எனினும் அவர் மேனாட்டாரே. ஆதலால், இங்குள்ள பல காரியங்களைத் தாம் புரிந்து கொண்டதாக அவர் கூற முற்படவில்லை. அவரது கருத்துக்கள் சிலவற்றை

இந்தியர் ஏற்க முடியாமல் இருக்கலாம். ஆயினும், அது சிறப்பாக எழுதப் பெற்ற நேர்மையான புத்தகம்.

அமெரிக்காவில் இந்தியாவைப் பற்றி அநேக புத்தகங்கள் வெளியாகியுள்ளன. அமெரிக்கர் உண்மையாகவே, இந்தியாவைப் பற்றி அறிய விரும்புகின்றனர் என்பதை இது உணர்த்தும். சென்ற ஆண்டில் வெளியான மூன்று முக்கிய புத்தங்களை அதற்கு உதாரணமாகக் காட்டலாம். ஜார்ஜ் ரோஸன் எழுதிய "இந்தியாவில் தொழில் துறை மாறுதல்" என்பது ஒன்று. அது ஐந்து தொழில்களை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சி. ஆஸ்லி கோல்ஸ், எட்கார் ஹூவர் என்பவர்கள் "மக்கள் தொகைப் பெருக்கமும், பொருளாதார வளர்ச்சியும்" என்னும் நூல் எழுதியிருக்கிறார்கள். பிறப்பு விகிதம் மிகவும் அதிகமாகக் குறைந்தால், பொருளாதாரம் பாதிக்கப்படக் கூடும் என்பது பற்றி அந்தப் புத்தகம் ஆராய்கிறது. இன்னொரு முக்கியமான புத்தகம் ஜோன் பான்டூரான்ட் எழுதிய "பலாத்காரத்தின் மீது வெற்றி: காந்தீய போராட்ட தத்துவம்" என்பதாகும். சத்தியாக்கிரகத்துக்கும் மேற்கத்திய அரசியல் தத்துவத்தின் சில இயல்புகளுக்கும் உள்ள சம்பந்தம் போன்றவை பற்றிய விஷயங்களை அந்தப் புத்தகம் எடுத்துரைக்கிறது.

கங்கைப் பாலம்

பீகார் ராஜ்யத்தில் மொகாம்மே என்ற இடத்தில் புதிதாகக் கட்டப்பெற்ற கங்கைப் பாலத்தை, இந்தியப் பிரதமர் ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு சமீபத்தில் திறந்து வைத்தார்.

கங்கை நதியின் இரு பக்கத்தில் வடபீகாருக்கும் தென்பீகாருக்கு மிடையே ரயில் போக்குவரத்து முழுவதும் இதுவரை படகுகளின் மூலமாகவே நடந்து வந்தது. இந்தப் போக்கு வரத்து ஏற்பாட்டில் உள்ள சிரமங்களும், பிரதிகூலங்களும் மிக அதிகம்.

மொகாம்மேயில் வாகன் படகுப் போக்குவரத்துக்குப் பதிலாக, கங்கைக்குக் குறுக்கே பாலம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று இந்த நூற்றுண்டின் ஆரம்பத்திலேயே கருதினர். அதற்காக கங்கைப் பாலக்குழு ஒன்றை அமைத்தனர். அக் குழுவினர் 1907 ஆம் ஆண்டில் சமர்ப்பித்த தங்கள் அறிக்கையில், மொகாம்மே என்ற இடத்தில் நதிக்குக் குறுக்கே பாலம் ஒன்றை அமைக்கும்படி கூறினர்.

அப்பொழுது இந்தியாவில் பல ரயில்வே கம்பெனிகள் இருந்தன. கிழக்கு இந்திய ரயில்வே கம்பெனி மொகாம்மேயில் ஒற்றைத் தட பிராட்கேஜ் பாலம் ஒன்றை அமைக்கும் யோசனையை 1909 ஆம் ஆண்டில் தெரிவித்தது. வங்காள நாகபுரி மேற்கு ரயில்வே கம்பெனி அந்த யோசனையை எதிர்த்தது. பிராட்

கேஜுக்குப் பதிலாக மீட்டர்கேஜ் பாலம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று அது கூறியது. இது சம்பந்தமாக நெடுநாள் கடிதப் போக்கு வரத்துப் பரிசீலனைக்குப் பிறகு ரயில்வே போர்டு, உத்தேசிக்கப் பெற்ற பாலம் கங்கை நதியில் மொகாம்மே கட்டத்தில் மீட்டர் கேஜ் பாதையில் அமைக்கப் பெறும் என்றும், அதற்கான திட்டங்களையும் மதிப்பீடுகளையும் தயாரிக்கும் படியும் வங்காள நாகபுரி மேற்கு ரயில்வே கம்பெனிக்கு 1917 ஆம் ஆண்டில் தெரிவித்தது.

அதை யடுத்து அதற்கான செலவு விவரங்கள் சம்பந்தமாகப் பல வருஷங்கள் கடிதப் போக்கு வரத்து நடைபெற்றது. 1925 ஆம் ஆண்டில் ரயில்வேக்களின் பிரதம கமிஷனரும், கிழக்கிந்திய, வங்காள-நாகபுரி ரயில்வே கம்பெனிகளின் ஏஜண்டுகளும் கூடிப் பேசினர். அதன் பயனாக பால அமைப்பு யோசனை தள்ளி வைக்கப் பெற்றது. ஆனால் நதியின் இருபக்கங்களிலுமுள்ள அந்தந்த ரயில்வேயைச் சேர்ந்த "யார்டுகளை" சீரமைப்பதற்கு ஏஜண்டுகள் கூறிய யோசனைகள் ஏற்றுக் கொள்ளப் பெற்றன.

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, 1945 ஆம் ஆண்டில்,பால அமைப்புப் பிரச்னை மீண்டும் வந்தது. ரயில்வே போர்டு அது விஷயமாக, பாட்னாவிலோ, மொகாம்மே கட்டத்திலோ கங்கைக்குக் குறுக்கே ரயில்-ரஸ்தா ஏற்பாட்டுடன் பாலம் ஒன்றை அமைப்பதற்காக, கிழக்கு இந்திய ரயில்வே கம்பெனி சர்வே ஒன்றை மேற்கொள்ள அனுமதி அளித்தது. 1946-47 ஆம் ஆண்டில் கங்கைப் பாலத்திட்ட துணைப் பிரதம எஞ்சினியர் ஸ்ரீ பி. பென்டன் அது சம்பந்தமாக விசாரணைகள் நடத்தி,மொகாம்மே கட்டத்தில் பாலம் ஒன்றை அமைக்கும்படி யோசனை

கூறினர். 413 அடி அகலமுள்ள 14 பகுதிகளும் (ஸ்பான்) 93 அடி அகலமுள்ள 4 பகுதிகளும் அமைக்கப் பெற வேண்டும் என்றும், அவை கிணறு ரீதியான அஸ்தி வாரத்தின்மீது கட்டப்பட வேண்டும் என்றும்,பாலத்தின் இரு முனைகளிலும் 258 அடி நீளமுள்ள வயாடக்ட் பாலம் கட்டவேண்டும் என்றும் ஸ்ரீ பான்டன் தெரிவித்தார்.

இந்தியா சுதந்திர மடைந்ததும்,1948 ஆம் ஆண்டில் மத்திய மந்திரி சபை இந்தப் பால அமைப்பு வேலையை மேற்கொள்ளும்படி ரயில்வே போர்டுக்கு அனுமதி யளித்தது. பின்னர் வழி வகை நிதி நிலைமையில் ஏற் பட்ட சிரமங்களில் மூலதனச் செலவுக் கட்டுப்பாடுகள் ஆகியவை காரணமாக ரயில்வே போர்டு திட்டத்தின் வேலைக் கட்டம் ஒவ்வொன்றையும் இரண்டிரண்டு வருஷ காலம் தள்ளிப் போடும்படி 1949 ஆம் ஆண்டில் உத்தர விட்டது.

நாட்டின் பிரிவினையும், அஸ்ஸாம் ரயில் இணைப்பின் அமைப்பும் வடக்கு வங்காளத்துக்கும், அஸ்ஸாமுக்கும் இடையே போக்குவரத்தின் போக்கையும், அமைப்பையும் பெரிதும் மாற்றிவிட்டன. இவற்றைக் கருத்தில் கொண் டும், பாட்னாவுக்கருகே பாலமொன்றை அமைப்பதற்கு பீகார் அரசாங்கம் பெரிதும் விரும்பி வந்ததை உத்தேசித் தும், கங்கைக்குக் குறுக்கே பாலம் போடுவதில் பல்வேறு தரப்பினர் கூறிவந்த பல்வேறு இடங்களை ஆராய்ந்து, பிராட்கேஜ் ரயில்வே பாலமொன்றை அமைப்பதற்கு மிகவும் அனுகூலமாக உள்ள இடம் பற்றிச் சிபாரிசு செய் வதற்காக,ஸ்ரீவிஸ்வேஸ்வரையாவை விசாரணை நடத்தும் படி 1952 ஆம் ஆண்டில் அரசாங்கம் கேட்டுக்கொண்டது. பால அமைப்புக்காக பாட்னா, மொகாம்மே, சக்ரிகாளி, பர் ராக்கா அல்லது ராஜ்மஹால் ஆகிய நான்கு இடங்கள் பற்றித் தெரிவிக்கப் பெற்றன.

ஸ்ரீவிஸ்வேஸ்வரையாபின்வரும் அம்சங்களைக் கவனத்தில் கொண்டு,பால அமைப்புக்கு மொகாம்மேயை மிகவும் தகுயுள்ள இடமாகத் தேர்ந்தெடுத்தார். அவர் கவனத்தில் கொண்டு பரிசீலித்த அம்சங்கள்.

(1)போக்குவரத்து அமைப்பு,நடவடிக்கைத் தேவைகள்

(2)பால அமைப்புக்கான ஆரம்பச் செலவு பராமரிப்புச் செலவு;

(3)விசேஷ எஞ்சினீயரிங் அம்சங்கள்.

(4)நதியின் போக்கு சம்பந்தமுள்ள இதர திட்டங்களுடன் தொடர்பு.

(5)நிர்வாக வசதிகள்-ராஜ்ய அரசாங்கம் பொது மக்கள் ஆகியோரின் கருத்துக்கள்.

அவருடைய சிபாரிசின் பேரில் இந்தப் பாலம் சம்பந்தமான வேலையை ஆரம்பிக்கும்படி மீண்டும் 1953 ஆம் ஆண்டில் உத்தர விட்டு அதற்காக ஜெனரல் மானேஜர் ஒருவரும் பிரதம எஞ்சினீயர் ஒருவரும் நியமிக்கப் பெற்றனர்.

நதியின் தென்கரையில் சரக்கை இறக்கி யேற்றி யனுப்புவதற்கான பகுதி,கொட்டடிகள், ஆகியவற்றுடன் மீட்டர் கேஜ் பாலமொன்றை அமைப்பதுதான் ஆரம்ப யோசனையாக யிருந்தபோதிலும், பல அனுகூலங்கள் காரணமாக வடக்குக் கரையில் அந்த வசதிகளுடன்கூடிய பிராட்கேஜ் பாலமொன்றை அமைப்பதென்று இறுதியாக முடிவு செய்தனர். இந்தத் திட்டத்தில் தென்கரையில் உள்ள பிராட்கேஜ் ரயிலடியை வடகரையில் உள்ள மீட்டர்கேஜ் ரயிலடியுடன் இணைக்கும் ஏற்பாடு உள்ளது.

இந்தப் பாலத்தின் மொத்தம் நீளம் சுமார் 600 அடி. அதன் கீழ்ப் பகுதியில் ஒவ்வொன்றும் 6 அடி அகல

முள்ள இரண்டு நடைப்பாதைகளும் 24 அடி அகலமுள்ள ரஸ்தாவும் உள்ளன.

இந்தப் பாலம் இதுவரை இல்லாதிருந்து வந்ததன் காரணமாக, பீகாரில் இரண்டு பகுதிகளுக்குமிடையே-வட பீகாருக்கும், தென் பீகாருக்குமிடையே-போக்குவரத்து, தங்கு தடையின்றி நடைபெற்று வருவதற்கு வசதியில்லாமல் இருந்து வந்தது, தென் பீகார், வடக்கு பீகாருக்கு அவசியமான உருக்கு, நிலக்கரி, சிமிண்டு, ரஸ்தா கப்பி, சுண்ணும்பு ஆகியவற்றை அனுப்பி வருகிறது. மழை காலத்தின்போது, வெள்ளத்தால் பாதிக்கப்படும் பிரதேசங்களுக்கு உடனுக்குடன் உணவுத் தானியங்களை அனுப்பவேண்டியிருக்கிறது. ரயில், படகுகள் ஆகியவை கையாளக்கூடிய பிரயாணி, சரக்குப் போக்குவரத்தின் அளவு ஒரு வரையறைக்குட் பட்டதாக இருப்பதால் பல கஷ்டங்கள் இருந்துவருகின்றன.

இப்பொழுது கங்கைப் பாலம் திறந்துவைக்கப்பட்டிருப்பதன் மூலம், வருங்காலத்தில் இந்த கஷ்டங்கள் யாவும் மறைந்துவிடும். இந்தப் பாலம் வட பீகாருக்குப் தென்பீகாருக்கும் இடையேதிறக்கப்பட்டது, துரிதமானதுமான போக்குவரத்துக்கு வகை செய்யும். ஐந்தாண்டுத் திட்டங்களின் பலனாக ஏற்பட்டுள்ள உற்பத்திப் பெருக்கத்தையடுத்து போக்குவரத்தும் பெரிதும் பெருகியுள்ளது. எனவே இந்தப் பாலம் இப்பொழுது ஒரு வரப் பிரசாதமாக வந்திருக்கிறதென்றே கூறவேண்டும்.

குற்றமிழைத்தோருக்கு நல்வாழ்வு

பிரிட்டிஷ் நீதிமன்றத்தில், அபராதம் அல்லது சிறைவாசம் கூறி குற்றமிழைத்தவர்களைத் தண்டிப்பது வழக்கம். சில சமயங்களில் குற்றவாளியை மன்னித்து விடுதலை செய்வதுமுண்டு. நன்னடத்தையுடன் வாழ வேண்டும் என்று எச்சரித்து, கண்காணிப்பு அதிகாரியின் (புரோபேஷன் ஆபீஸர்) பார்வையில் வாழ அனுமதிப்பதும் உண்டு. கண்காணிப்புக்கு அடங்கி நடப்பதாக உறுதி கூறினால்தான், பதினான்கு வயதை மீறிய குற்றவாளிக்கு, எச்சரிக்கை விடுதலை கிடைக்கும்.

நெறி தவறியவர்களை நல்வழிப்படுத்தும் முயற்சியில் சமூகத்திற்கும் பங்குண்டு என்ற நம்பிக்கையில்தான் கண்காணிப்பு முறை அமைக்கப்பட்டது. நீதிமன்றத்திற்கு தந்த வாக்குப்படி, கண்காணிப்புக்கு அடங்கி நடக்கும் பொறுப்பு குற்றவாளிக்கு உண்டு. திருந்தி வாழ வாய்ப்பளித்து, அவனை (அல்லது அவளை) நல்வழிப்படுத்தும் பொறுப்பை, சமூகத்தின் சார்பில், கண்காணிப்பு அதிகாரி ஏற்றுக் கொள்கிறார்.

நன்னடத்தையுடன் வாழ்வதாக உறுதி கூறி விடுதலை பெறுபவன், அவ்வப்போது, கண்காணிப்பு அதிகாரியைச் சந்தித்து வரவேண்டும். அவனுடைய பிரச்னைகளைப் பற்றி ஆலோசிக்கவும், நடத்தையைக் கவனிக்கவும், கண்காணிப்பு அதிகாரி, அவனுடைய வீட்டுக்குச் செல்வதுமுண்டு. இளங் குற்றவாளியாக இருந்தால்

அவனை நல்வழிப்படுத்துவது பற்றி, கண்காணிப்பு அதிகாரி, பெற்றோரைக் கலந்தாலோசிப்பார். அவனைப் பள்ளியிலோ தொழிற்சாலையிலோ சேர்த்திருந்தால் ஆசிரியரையோ, தொழிற்சாலை நிர்வாகியையோ சந்தித்துப் பேசுவார்.

கண்காணிப்புக்குட்பட்டவன் அனாதையாக இருந்தால், அவனுக்கு உணவும், உறைவிடமும், வேலையும் தேடித்தரும் பொறுப்பை கண்காணிப்பு அதிகாரி எடுத்துக்கொள்வதுண்டு. குடி, கூடாநட்பு, வறுமை எனப் பல காரணங்களால், ஒருவன், குற்றம் செய்ய நேரிடுகிறது. திருந்தி வாழ உறுதி கூறினாலும், வசதியும், வாய்ப்பும் கிடைத்தால்தான் அவன் பயனடைய முடியும். அவனுக்கு அறிவுரை வழங்கி, ஆடையும் உண்டியும் கிடைக்க உதவி செய்து, அவனை நல்வழிப்படுத்தும் பொறுப்பு கண்காணிப்பு அதிகாரியைச் சேர்ந்தது. குற்றவாளியின் குணமறிந்து, திருத்த முயல்வதே சிறந்தது. இதற்காக, கண்காணிப்பு அதிகாரி, உளவியல் நிபுணரையும், சமூக நல ஊழியரையும் கலந்தாலோசிப்பதுண்டு. உடலில் கோளாறு இருந்தால் அதை அகற்ற வைத்தியருடைய உதவியை நாடுவதுமுண்டு.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்து சர்ச்சைச் சேர்ந்த சில ஊழியர்கள் இந்த நற்பணியைத் தொடங்கினார்கள். இங்கிலாந்து சர்ச்சின் மிதக்குடிப்பிரசார சபை, நீதி மன்றத்திற்கு வரும் குடிகாரர்களை நல்வழிப்படுத்தத் திட்டமிட்டது. குடிகாரர்களுக்கு, ஆலோசனை கூறி உதவவும், அறிவுரை வழங்கவும் மன்றஊழியர்களை நியமித்தது. இவர்களுடைய முயற்சியால் முதற்குற்றம் செய்த பலர் திருந்தி வாழத் தொடங்கினார்கள். இதைக் கவனித்த அரசாங்கம், குற்றம் புரிந்தோர்க்கு, திருந்தி வாழ வாய்ப்பளிக்கும் நோக்கத்

துடன், 1907 இல் ஓர் சட்டமியற்றியது. இதனால் குற்றவாளிகளுடன் உறவாடி அவர்களை நல்வழிப்படுத்த, ஒவ்வோர் நீதி மன்றத்திலும், கண்காணிப்பு அதிகாரியை நியமிப்பது சாத்தியமாயிற்று.

சந்தர்ப்பத்தாலோ, உணர்ச்சிவசப்பட்டோ, சிலர் குற்றம் செய்து விடுகிறார்கள். குற்றவாளிகள் அனைவரையும் தீயவர்கள் என்று கூறிவிடமுடியாது. நெருங்கிப் பழகி நல்லுரை கூறுவதால் பலரைத் திருத்திவிடமுடியும் என்ற நம்பிக்கையால்தான் 1907 ஆம் ஆண்டு கண்காணிப்புச் சட்டம் உருவாயிற்று. முதல் ஆண்டிலேயே, குற்றம் கடிவதில் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டுவிட்டது. சுமார் 8,000 குற்றவாளிகள் கண்காணிப்பு நிபந்தனையில் விடுதலை பெற்றார்கள். இந்த முயற்சி வெற்றி பெற்றதால், ஆண்டுக்கு ஆண்டு, விடுதலை பெறுவோர் எண்ணிக்கையும் அதிகரித்தது. 1957 இல், 34,000 பேர் நன்னடத்தையுடன் வாழ்வதாக உறுதிகூறி விடுதலை பெற்றார்கள். இவர்களில் சிறுவர்களுமுண்டு, பெரியோர்களுமுண்டு. கொலை நீங்கலாக, கொடுங் குற்றங்களைச் செய்தோரும் உண்டு.

ஒரு குற்றவாளியை, கண்காணிப்பில் விடுதலை செய்ய நேர்ந்த, சந்தர்ப்பம், மனநிலை முதலியவை பற்றித் தெரிந்து கொள்வது அவசியம். கண்காணிப்பு அதிகாரி இந்தத் தகவல்களைத் தொகுத்து நீதிபதியிடம் சமர்ப்பிப்பார். குற்றவாளியும் அதிகாரியும் ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டால்தான் சீர்திருத்த முயற்சி வெற்றி பெறும்.

பொதுவாக முதற்குற்றம் செய்தவர்களில் நூற்றுக்கு எண்பது பேர்கள், நன்னடத்தை ஜாமீன் காலத்திற்குள்ளேயே (ஒன்று அல்லது இரண்டாண்டுகள்) திருந்தி

விடுகிறார்கள். பல குற்றங்களைச் செய்தோரும், நன்னடத்தை உறுதிமொழிகொடுத்து விடுதலை பெறுவதுண்டு. இவர்களில் நூற்றுக்கு அறுபத்தைந்து பேர்கள் திருந்தி விடுகிறார்கள்.

திருந்தி வாழ்வதாக உறுதிகூறி தவறியவர்கள் சட்டத்தின் ஆணைக்குத்தப்பி விடுவதில்லை. உறுதிமொழியை மீறினாலும், கண்காணிப்புக் காலத்தில், புதிய குற்றம் செய்தாலும், புதிய குற்றத்துடன்,பழைய குற்றத்திற்கும் சேர்த்து இரட்டிப்புத் தண்டனை பெறவேண்டும்.

பிரிட்டிஷ் நீதி மன்றம் ஒவ்வொன்றிலும் கண்காணிப்பு அதிகாரி உண்டு. இங்கிலாந்திலும் வேல்ஸிலும் 1400 அதிகாரிகளும், ஸ்காட்லாந்தில் 125 அதிகாரிகளும், இருக்கிறார்கள். குற்றவாளிகளைப்பற்றிய தகவல் சேகரிப்பதுடன், விசாரணையின்போது நீதி மன்றத்தில் இருப்பதால், கண்காணிப்பு அதிகாரிகள், வேறு பல பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்கிறார்கள். கூடா நட்பால் வழி தவறிய இளங்குற்றவாளிகளுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் கண்காணிப்பு அதிகாரியின் உதவி நாடப்படுகிறது. சீர்திருத்தப் பள்ளியிலிருந்து வெளிவரும் இளைஞர்களின் வாழ்க்கையை கவனிப்பது, சிறையிலிருக்கும் கைதியின் குடும்பத்திற்கு சட்ட ரீதியில் உதவுவது எனப் பல பொறுப்புகளை, கண்காணிப்பு அதிகாரிகள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

குற்றவாளிகளுக்குத் தண்டனை அளிப்பதைவிட, திருந்தி வாழ வாய்ப்பளிப்பதால், அவர்களும் நன்மை அடைகிறார்கள், சமூகத்திற்கும் லாபமுண்டு.

கொய்த மலர்கள்

பிரார்த்தனை

உலக முண்ட பெருவாயா! உலப்பில் கீர்த்தி யம்மானே!
நிலவுஞ்சுடர் சூழொளி மூர்த்தி! நெடியாய்! அடியேனுருயிரே!
திலத முலகுக்காய் நின்ற திருவேங்கடத்தெம் பெருமானே!
குல தொல்லடியேன் உன்பாதம் கூடுமாறு கூறுயே.

—திருவாய்மொழி

பக்தன்

எவனொருவன் தனக்கு ஆண்டவனிடமுள்ள பக்தியை, உயிர்களிடத்துத் தான் கொள்ளும் அன்பிலே பார்க்கிறனோ,இன்னும் இவையனைத்தையும் ஆண்டவன் மீதுள்ள பத்தியில் காண்கிறனோ,அவன்தான் மேன்மையான பக்தன்.

—பாகவதம்

கடவுள்

கடவுள் தேவலோகத்திலும் இல்லை; பாதாள உலகத்திலும் இல்லை; ஒவ்வொரு மனிதனிடத்திலும்தான் குடிகொண்டிருக்கிறார். அதனல்தான் மனித வர்க்கத்துக்குச் சேவை செய்வதன் மூலமாகக் கடவுளைக் காண முயன்று கொண்டிருக்கிறேன்.

—காந்தியடிகள்

முதுகெலும்பு

மதமே உங்கள் முதுகெலும்பாக இருக்கட்டும்.

—சுவாமி விவேகாநந்தர்.

நிலை

எது நேர்ந்தாலும் நிலையில் நின்றும் பிறழாதே.

—சுவாமி விவேகாநந்தர்

தவம்

தவம் என்பது மூவகைத்து; உடலைப் பற்றியது' வாக்கைப் பற்றியது, மனத்தைப் பற்றியது.

முதலாவது தவம் பிறர்க்குப் பணி செய்தல்.

இரண்டாவது மெய்மை.

மூன்றாவது அடக்கமும் ஒழுக்கமும்.

—சுவாமி விவேகாநந்தர்

அதிர்ஷ்டம்

மனித உடலைப் பெறுவது முதல் அதிர்ஷ்டம்.

முக்திக்கான துடிதுடிப்பு இரண்டாவது அதிர்ஷ்டம்.

மகான்களுடைய சேர்க்கை, அவர்கள் காட்டும் வழியில் நடத்தல் மூன்றாவது அதிர்ஷ்டம்.

—ஆதி சங்கராச்சாரியார்

எச்சில் துப்பல்

மனிதனுடைய உடல் கடவுளின் திருக்கோயிலாகும். அதில் புகுவதற்கென அமைந்த காற்றை எச்சில் துப்பல்களால் அசுத்தம் செய்வோன், எவ்வளவுதான் கடவுளின் பெயரை ஜபித்தாலும் அது வீணே.

—காந்தியடிகள்

ஏமாற்றமே அறியாதவர்

பக்தருக்கு ஏமாற்றம் என்றால் என்னவென்றே தெரியாது. ஏனெனில் எல்லாவற்றையும் வகுத்து நடத்தும் அந்த ஆண்டவன் கையில் காலமே அடக்கம் என்பதும், எல்லாவற்றையும் உரிய காலத்தில் அவன் செய்வான் என்பதும் அவருக்குத் தெரியும்.

—காந்தியடிகள்

விக்கிரக ஆராதனை

விளையாட்டுப் பழமும், விளையாட்டு யானையும் உண்மையான பழத்தையும் யானையையும் நினைப்பூட்டுவதைப் போல, ஆராதிக்கப்படும் விக்கிரகங்கள், நித்தியனும் அரூபியுமான ஆண்டவனை நினைப்பூட்டுகின்றன.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

மேலான பாவம்

பயமே எல்லாப் பாவங்களுக்கும் மேலான பாவம் என்று என் உள்ளம் கூறுகிறது.

—சுவாமி விவேகாநந்தர்

அறிவுரை

ஒரு பெரிய தடாகத்தில் குளிக்கும் துறைகள் பல இருக்கின்றன. குளிக்கவோ, தண்ணீர் எடுக்கவோ யாராயிருந்தாலும், எந்தத் துறை வழியாக இறங்கின போதிலும், நீர் மட்டத்துக்குப் போகக்கூடும்.

ஒருவனுடைய துறை நல்லது; மற்றவனுடைய துறை கெட்டது என்று சண்டைபோடுவது வீண்.

அதே போல, நித்தியானந்தமாகிய நீர்த் தடாகத்துக்குப் போகும் துறைகளும் பல.

உலகத்திலுள்ள ஒவ்வொரு மதமும் அப்படிப்பட்ட துறைகளில் ஒவ்வொன்ருகும்.

இந்தத் துறைகளில் ஏதாவதொன்றின் வழியே நேராகத் திடபக்தியுடன் சென்ருல், நீ நித்தியானந்த நீர்த்தடாகத்தை அடைவது நிச்சயம்.

ஆனல் உனது மதந்தான் உயர்ந்து, மற்றவை தாழ்ந்தவை என்று மட்டும் சொல்லாதே.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

ஞான ஒளி

தனது நெஞ்சமாகிய குளத்து நீரின் கொந்தளிப்பை மெல்ல மெல்ல அமர்த்தி, அதனாலே ஞான் ஒளியை எவன் பெறக்கூடும்?

மனத்தை ஒருமுக மாக்குவதினால்,மன அமைதியைப் பெற்றபின், அந்த அமைதியினின்று மெல்ல, மெல்ல வாழ்க்கைச் சுழலிற் புகுந்தும், எப்போதும் மன அமைதியை விடாது காப்பாற்றக்கூடியவர் யார்?

தற்பெருமை யினின்று தம்மைக் காத்துக் கொள்ப வரும், முத்தி நெறியினின்றும் விலகாத வண்ணம் தம் வாழ்க்கையை அடக்கி யாள்பவரும் மட்டும்தான். தற் பெருமையின்று நீங்கியிருத்தலின், அன்னாரது ஊக்கமும் சக்தியும் ஒருக்காலும் குன்றி மறையாது, அப்போதைக் கப்போது புதிதாகப் பெருகி வரும்.

—சீன ஞானி லோயாட்சே

இறைவன்

என் உயிரினிடத்து ஒரு திறமை உள்ளது; அதன் பயனாக அது இறைவனுக்கு முற்றிலும் திறந்த நிலையில் உள்ளது. நான் வாழ்வது எவ்வளவு உறுதியோ, அவ் வளவு உறுதி அதைப் பற்றி எனக்கு உண்டு. வேறொன் றும் இறைவனைப்போல எனக்கு அவ்வளவு அருகில் இல்லை. என்னை காட்டிலும் இறைவன் எனக்கு மிக அருகே உள்ளான். அவனுடைய சந்நிதியே எனது இருப்பு.

—மாஸ்டர் எக்ஹார்ட்

பரம்பொருள்

எல்லாவற்றிலும் ஒன்றையே (பரம்பொருளையே) காண்க; அதைத் தவிர இரண்டாவது உன்னை நெறி தவறச் செய்யும்.

—கபீர் தாஸ்

மிக உயர்ந்த அறிவு

பிராமணர்:- மிக உயர்ந்த அறிவு யாது?

சோக்ரட்டீஸ்:- மனிதனை அறிதலே எல்லா அறிவின் நோக்கமும் பயனும் ஆகும்.

பிராமணர்:- ஆனால் கடவுளை அறியாது நீர் மனிதனை எவ்வாறு அறிய முடியும்.?

—மாக்ஸ்முல்லர்

அன்பினால் உணர்வற்று இருந்தல்

ஒரு மங்கையின் கணவன் பல நாட்களுக்குப் பிறகு அயல் நாட்டிலிருந்து திரும்பி வந்தான். அவனைக் காண்பதற்காகத் தன்னையே மறந்த நிலையில், தன் பெற்றோரின் வீட்டிலிருந்து புறப்பட்டு விரைவில் பாதையில் நடந்தாள் அந்த மங்கை.

பாதையில் அந்த நாட்டு மன்னன் கூடாரத்தை அமைத்திருந்தான். அவன் உயர்ந்த விரிப்பைத் தரையில் விரித்து அதில் முழங்கால் படியிட்டு இறைவனைத் தொழுது கொண்டிருந்தான். கணவன்பால் முழுமனத்தையும் செலுத்திய அந்த மங்கை, தரையில் உள்ள விரிப்பையோ தொழுகையில் ஈடுபட்டிருந்த அரசனையோ கவனிக்கவே இல்லை. அந்த விரிப்பின் மேல் கால்களை வைத்துச் சென்றாள்.

அதைக் கண்ட அரசன் அதிக கோபமடைந்தான். ஆயினும் ஆண்டவனைத் தொழும் நேரத்தில் பேசக் கூடாது ஆதலால் பொறுத்துக் கொண்டிருந்து விட்டான்.

சிறிது நேரத்துக்குப் பிறகு, தன் கணவனை அழைத்துக் கொண்டு தன் பெற்றோர் வீட்டுக்கு, அதே மங்கை திரும்பி வந்து கொண்டிருந்தாள். அரசன் பணியாட்களை அனுப்பி அவளை அருகில் வரவழைத்தான்.

அரசன்:- ஏ தீய மங்கையே! இறைவனை வழி பட்டுக் கொண்டிருந்த நான் அமர்ந்திருந்த விரிப்பில் கால்களை வைத்துச் சென்றனையே! இது ஒழுங்கான செயலா? அரசன் தொழுகிறான் என்பதுகூட உனது கண்களுக்குப் படாது ஒழிந்தனவா?

மங்கை:- அரசர்க்கரசே! அற்ப மனிதனான என் கணவன் மீது அன்பு கொண்டு அறிவை இழந்த நான், தாம் தொழுவதைக் கூடக் கவனியாது சென்று பெரிய குற்றத்திற்கு ஆளானேன். ஆனால் எல்லாம் வல்ல இறைவனையே எண்ணி அன்புடன் தொழுத தமக்கு, நான் விரிப்பை மிதித்துச் சென்றது எவ் விதம் தென்பட்டது? நீர் வெளித் தோற்றத்திற்காகத் தொழுகின்றீர் போலும்! உம் உள்ளம் இறைவன் பால் இல்லை.

இதனைக் கேட்ட அரசன், தன் தவறை உணர்ந்து, மங்கையை வாழ்த்தினான்.

—'கல்யாணி'

மன அமைதி

தியான மின்றி மனம் அமைதியடைய முடியாது; அமைதி யின்றி ஞான வாழ்வு இல்லை.

—சுவாமி பிரமாநந்தர்

ஞானியின் நிலை

தூங்கும்போது எஜமானன் என்னும் நினைவும் இல்லை; அடிமை என்னும் நினைவும் இல்லை.

தூங்கும்போது கைதி சிறையில் இருப்பதை மறக்கிறான். தூங்கும்போது அரசன் தன் செல்வத்தை மறக்கிறான். துயரமோ, கவலையோ, லாபமோ, நஷ்டமோ, எவனையும் பற்றிய நினைப்போ, பயமோ, அப்போது இல்லை.

உண்மை ஞானி உலகில் வாழும் வகை இப்படித் தான். அவன் விழிப்போடு தூங்குவான்;இரவும் பகலும் உலக விஷயங்களுக்குச் செத்தவன் போல இருப்பான். கடவுள் கையிலே உள்ள ஓர் எழுதுகோலைப்போல நடப் பான்.

—ஜலாலுடன் ரூமி

மனச் சுத்தம்

மனம் சுத்தமானால், அப்போது உண்மையாகவே பகைவரும் நண்பராவர். அப்போது புலியும் பாம்பும் ஒருவரை எவ்விதத்தும் துன்புறுத்தா. விஷமும் அமுத மாகும். உதையும் உதவியாகும். செய்யத் தகாத ஒன்றே நீதியான செயலைக் காட்டும் வழியாகும். துயரமே இன் பத்திற்குக் காரணமாகும். கொழுந்து விட்டெரியும் தீயும் குளிர்ந்துவிடும். எல்லோருடைய இதயங்களிலும் ஒரே அந்தர்மியான பகவான் வாழ்வதை ஒருவர் உண ரும் பொழுது இவையனைத்தும் நிகழ்வனவாகும்.

—ஏசுநாதர்

மரணம்

நாம் எந்தத் தொழில் ஈடுபட்டிருந்தாலும் எப் போதும் மரணத்தைப் பற்றி நினைத்துக் கொண்டே யிருக்கவேண்டும். ஒரு கொலையாளியைத் தூக்குமரத் துக்கு நடத்திச் செல்லும் போது, அடி யெடுத்து வைக் கும் தோறும் மரணம் அவனைக் கிட்டி வருகிறது. ஒரு மரத்தின் தூற்றிலே கோடரியால் வெட்டி வரும்போது கணந்தோறும் அதனுடைய ஆயுள் வர வரக் குறுகி வரு கின்றது.

அதுபோல், நாம் யாது செய்து வரினும் மரணம் நம்மை விடாது எப்போதும் அணுகி வருகிறது என்பதை நாம் நினைத்துவர வேண்டும்.

உறங்குபவன் முன்பு ஒரு பாம்பும் ஓர் அழகிய கன்னியும் ஒன்றுவதுபோல, நமக்குமுன் விழிப்பு நிலையிலும் புலன்களுக்குத் தோன்றும் பொருள்கள் அனைத்தும் விகாரத்தை விளைக்க முடியாதனவாக வேண்டும்.

சாணத்தையும், தங்கத்தையும் மணியையும் கல்லையும் நாம் சமமாக மதித்தல் வேண்டும்.

வானம் கீழே விழுந்து நம்மைச் சூழ்ந்துகொண்டாலும் சரி, தலையின்மீது சொந்தழலைச் சொரிந்தாலும் சரி நம்மை ஆத்மனுக உணர்ந்து வாழும் வாழ்வைக் குலைக்க இடந் கொடாது இருத்தல் வேண்டும்.

—நாமதேவர்

அறிவின் லட்சியம்

எல்லா அறிவின் லட்சியமும் ஒழுக்கத்தை வளர்ப்பது தான்.

—காந்தியடிகள்

நாஸ்திகர்கள்

நல்லொழுக்கமும் நீதியும் நாஸ்திகர்களுக்கும் அவசியமே யாகும். ஆதலால் எனது ராஜ்யத்தில் நாஸ்திகர்கள் எவரேனும் இருந்தால் அவர்களை எவரும் தொந்தரவு செய்யலாகாது. ஏனெனில் மனிதனுடைய மதமும் விசாரமும் வேறு வேருக இருந்தாலும் முடிவில் அவனுடைய உத்தேசம் ஒன்றினிடத்தே இருக்கும்.

—அசோகச் சக்ரவர்த்தி

நாஸ்திகம்

கடவுள் நம்பிக்கையில்லாதவனை நாஸ்திகன் என்று பழைய மதங்கள் கூறின. ஆனால் தன்னிடத்தில் நம்பிக்கை யில்லாதவனையே நாஸ்திகன் என்று புது மதம் கூறுகிறது. இந்தத் தன்னம்பிக்கை சுயநலத்தை நாடும்

எண்ணம் அன்று. இந்த நம்பிக்கை எல்லோரிடமும் வைக்கவேண்டிய விசுவாசத்தையே குறிக்கும்.

—சுவாமி விவேகாநந்தர்

குண வலிமை

மலரின் சுகந்தம் காற்றை எதிர்த்துச் செல்லாது. சந்தன வாசனையும் தூப தீபங்களின் மணமும் காற்றுச் செல்லும் வழியே செல்லும். நல்லொழுக்கத்தின் மணம் காற்றையும் எதிர்த்துச் செல்லவல்லது. சத் புருஷனின் மணம் நாலா மூலையிலும் பரவுகிறது.

—தம்மபதம்

வட்டி வாங்குதல்

வட்டி (வாங்கித்) தின்கிறவர்கள், பேய் பிடித்துப் பித்தங் கொண்டவர்கள் எழும்புவது போலன்றி (வேறு விதமாக மறுமையில்) எழும்பமாட்டார்கள். அல்லா வட்டியை அழித்துத் தர்மங்களை வளர்க்கிருர். வட்டியில் (இது வரை வாங்கியது போக) மீதமிருப்பதை (வாங்காமல்) விட்டுவிடுங்கள்.

—குர் ஆன்

ஒரு சிறுமியின் பிரார்த்தனை

பகவானே! கெட்ட மனிதர்களை நல்லவர்களாகச் செய்; நல்லவர்களை மனத்துக்கு உகந்தவர்களாகச் செய்.

—எச். இ. பாஸ்டிக்

கல்வி போதனை

இயந்திரம் ஒரு சிறந்த சத்குண போதகன். ஒரு குதிரையோ, கழுதையோ ஓடவில்லையானல், ஜனங்களுக்குக் கோபம் உண்டாகிறது. அவற்றை அடிக்கிருர்கள். ஓர்இயந்திரம் சரியாக ஓடவில்லையானல் அதை அடித்துப் பயனில்லை. அதிலிருக்கும் பழுதைக் கண்டு பிடிக்கும்

வரையில் சிந்தித்து முயற்சி செய்யவேண்டியிருக்கிறது. இதுவே உண்மையான கல்வி போதனையாகும்.

—கில்பர்ட் மர்ரே

ஜோதிடர் யுக்தி

இத்தாலியில் பதினோராம் லூயி என்ற மன்னர் ஆண்டு வந்த காலத்தில், காலியோட்டி என்ற ஒரு ஜோதிடர் இருந்தார்.

லூயி:- ஜோதிடரே! இன்ன தினத்தன்று நீர் மரணம் அடைவீர் என்று நிச்சயமாகச் சொல்லமுடியுமா?

காலியோட்டி:- அரசே! அது சரியாய்த் தெரியாது. ஆனால் ஒன்று நிச்சயமாய்த் தெரியும். தாங்கள் இறக்கத் திட்டமாய் இருபத்து நான்கு மணிநேரம் இருக்கும் போது நான் மரண மடைவேன்.

அது முதல் ஜோதிடரின் ஆரோக்கியத்தை, வெகு கவலையோடு மன்னர் லூயி பாதுகாத்து வரலானார்.

இரு சீன வேதாந்திகள்

முதல் வேதாந்தி:- நீரிலே மீன்கள் எவ்வளவு ஆனந்தமா யிருக்கின்றன?

இரண்டாம் வேதாந்தி:- அது எப்படி உமக்குத் தெரியும்? நீர் மீன் அல்லவே?

முதல் வேதாந்தி:- எனக்குத் தெரியாது என்று உமக்கு எப் படித் தெரியும்? நீர் நான் அல்லவே?

—ஆர்தர் வேலி

வேதனை

வேதனை, பாவத்தின் விளைவு.

—கௌதம புத்தர்

வதைக்கும் கல்வி

கழுதையை நன்ருய்ப் புடைத்தால், அது குதிரையாகிவிடுமென்று, யாரோ சொல்லக் கேட்டு, அவ்விதமே ஒருவன் செய்தானும். நம்முடைய சிறுவர்களுக்கு இந்த மாதிரியான கல்வியே அளிக்கப்பட்டு வருகிறது. இந்த முறை தொலையவேண்டும்.

—விவேகாநந்தர்

இலக்கண வேலி

ஒரு முறை ஜோஹன் கிறிஸ்டபர் காட்ஷட் என்ற பிரபல ஜெர்மன் அறிஞர், பிரிட்டிஷ் தூதர் மிட்ஷெல் என்பவருடன் ஷேக்ஸ்பியரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

காட்ஷட்:- நாடகத்துக்கு அரிஸ்டாட்டில் சொன்னதுதான் சட்டம். ஒரு நாடகத்துக்கு ஐந்து அங்கங்கள் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிருர். ஷேக்ஸ்பியருக்கு அது தெரியவில்லை. மனம்போன போக்கில் எழுதியிருக்கிருர்.

மிட்ஷெல்:- நல்லது அரிஸ்டாட்டில் ஒரு வேதாந்தி என்பதை மறந்துவிட்டு அவரை ஒரு தையல்காரராக வைத்துக் கொள்வோம். சட்டையும், கோட்டும், நிஜாரும் ஐந்து கஜத்துக்குள்ளேயே தைக்கவேண்டும் என்று அவர் சொல்லுகிருர். ஆனல் நீர் சற்று உயரம்; பருமனும்கூட,அவர் விதியை மீற உமக்குத் தைரிய மில்லையானல், உமக்குக் கோட்டும், சட்டையும் மாத்திரமே கிடைக்கும். அரிஸ்டாட்டில் சொல்லுகிருரே என்பதற்காக நிஜார் இல்லாமல் திரிவீரா?

இரு பாபாத்மாக்கள்

இரண்டு மனிதர்கள் தமது பாவங்களிலிருந்து விமோசனம் பெற ஒரு ஞானியிடம் யோசனை கேட்கப் போனார்கள்.

ஒருவன் தான் மகா பாவம் செய்ததாகச் சொன்ஞன். மற்றவன் தான் அப்படிப் பிரமாதமாகப் பாவச் செயல் களில் ஈடுபடவில்லை என்று சொன்ஞன்.

ஞானி அவர்களுடைய பாவங்களின் விவரத்தைக் கேட்டார்.

முதல் மனிதன்:- (அழுது கொண்டே) ஆத்திரத்தில் என் நண்பனைக் கொன்று விட்டேன். இப்போது என் மனச் சாட்சி என்னைத்துன்புறுத்துகிறது. அதை நினைத்து நினைத்துப் புழுங்குகிறேன்.

இரண்டாவது மனிதன்:- (உற்சாகத்தோடு) நான் சிறு சிறு பாவங்கள் தான் செய்தேன்; அவை குறிப்பிடத் தக்கவையுமல்ல; நினைவிலும் இல்லை.

ஞானி கொஞ்சநேரம் யோசித்து விட்டு, முதல் மனி தனைப் பார்த்து "மகனே! நீ போய் உன்ஞல் சுமக்க முடிந்த அளவுக்கு பெரிதான ஒரு பாருங்கல்லைத் தூக்கிக் கொண்டு வா" என்ருர். இரண்டாவது மனிதனைப் பார்த்து, "மகனே! நீ ஒரு சாக்கு எடுத்துக் கொண்டு போய், அது கொள்ளுமளவுக்கு சிறு சிறு கற்களாகப் பொறுக்கிக் கட்டிக் கொண்டுவா" என்ருர்.

இருவரும் சென்ருர்கள். முதல் மனிதன் பெரிய பாருங்கல்லுடனும், இரண்டாவது மனிதன் ஒரு மூட்டை கூழாங் கற்களுடனும் வந்து சேர்ந்தனர்.

ஞானி இருவரையும் பார்த்து, "சரி, இனி நீங்கள் இருவரும் சென்று இந்த கற்களை எங்கெங்கிருந்து எடுத் தீர்களோ, அங்கேயே போட்டு வாருங்கள்" என்ருர்.

இருவரும் அங்கிருந்து சென்றனர். முதல் மனிதன் தான் எடுத்து வந்த பாருங்கல்லை எடுத்த இடத்திலேயே

போட்டு விட்டுத் திரும்பினுன். இரண்டாவது மனிதன் கற்களைப் பொறுக்கிய இடங்களைக் கண்டு பிடிக்க முடியாமல் ஞானியிடமே திரும்பி வந்தான். வந்து தனது இயலாமையைத் தெரிவித்தான்.

ஞானி இருவரையும் பார்த்து, "மக்களே! பாவம் என்பது இந்தக் கற்களைப் போன்றதுதாள். பெரும் பாவம் செய்தவனின் மனத்தை,அப்பாவம் இந்தப் பாருங் கல்லைப் போலவே அழுத்தும். அவன் அதை உணர்ந்து வருந்தும்போது, அந்தப் பாவத்தை மன்னித்துவிடமுடியும். சிறு சிறு பாவங்களைச் செய்பவனுல், அவற்றை மனத்தில் நினைத்துப் பார்க்கக்கூட முடியாதபோது, அதை நினைத்து வருந்த முடியாத போது அவன் பாபியாகவே இருக்கிருன். ஆகவே, சிறு பாவங்களையும் பெரும் பாவத்தைப் போலவே கருதவேண்டும்" என்ருர்.

—டால்ஸ்டாய்

கவலை மனம்

நோயில்லாத கண்ணுனது தன் எதிரில் நிற்பது எதையும் பார்க்கும். "பசும் பொருள்களை மாத்திரம் பார்ப்பேன்; மற்ற நிறங்களைப் பார்க்க முடியவில்லை" என்ருல், அது கண்ணில் நோய் இருப்பதற்கு அறி குறியாகும். அவ்வாறே செவியும், மூக்கும் எந்த ஒலியையும் எந்த நாற்றத்தையும் உட்கொள்ளும். இயந்திரத்தில் எப்பண்டமும் அரைபடுவது போல, நோயில்லாத வயிற்றில் எந்த உணவும் ஜீரணித்துப் போகும். இவ்வாறே நோயில்லாத உள்ளத்திலும்,எது நேர்ந்தாலும் ஜீரணித்துப் போகவேண்டும். அதாவது பொறுமையுடன் அதைத் தாண்டவேண்டும்.

என் குழந்தைகளின் சுகம் என்ன, நான் செய்வதை மக்கள் புகழ்கிருர்களா என்னும் கவலைகள் உண்டானுல்,

மனிதன் நோய்வாய்ப் பட்டவனே ஆவான். அவனது உள்ளம், "இதைப் பார்க்கமுடியும், அதைப் பார்க்க முடியாது" என்று சொல்லும் நோய்ப் பட்ட கண்ணைப் போலவும் "இதை மெல்ல முடியும் அதை மெல்லமுடியாது" என்று மறுக்கும் பற்களைப் போலவும் ஆரோக்கிய மற்ற உள்ளமாகும்.

—மார்க்கஸ் ஔரேலியஸ்

முடிவும் முதலும்

எங்கே நீ ஒரு மகத்தான முடிவைக் காண்கிறாயோ, அங்கே மகத்தானதோர் ஆரம்பமும் உண்டாகப் போகிறது என்பதை உறுதியாக நம்பு. ஒரு கோரமான துன்பம் நிறைந்த அழிவு உன் மனத்தை அச்சுறுத்தும் போது ஒரு பெரிய மகத்தான சிருஷ்டியும் நிச்சயமாக வரவிருக்கிறதென அதற்கு ஆறுதல் கொள். இறைவன், அமைதியான சிறு குரலில் மட்டுமின்றி, தீயிலும் புயல் காற்றிலும் உள்ளான்.

—அரவிந்தர்

தியாகம்

தியாகமும், ஒழுங்கும், சுயகட்டுப்பாடும் இல்லாமல் விமோசனமோ, நம்பிக்கையோ ஏற்படாது. ஒழுங்கு இல்லாத, வெறும் தியாகத்தினால் மட்டும் யாதொரு பயனும் உண்டாகாது.

—காந்தியடிகள்

பொறுமை

பொறுமைதான் பெரிய பிரார்த்தனை.

—புத்தர்

தொழில்-நுட்பப் பொருட்காட்சிச்சாலை

பொருட்காட்சிச்சாலைகளை விஞ்ஞானப் பொருட் காட்சிச்சாலைகள், கலைப் பொருட்காட்சிச்சாலைகள் என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். பிர்லா தொழில் நுட்பப் பொருட்காட்சிச்சாலை ஒரு விஞ்ஞானப் பொருட் காட்சிச்சாலையாகும்.

விஞ்ஞானப் பொருட்காட்சிச்சாலைகள் முதலில், ஐரோப்பாவில்தான் தோன்றின. ஆனால், இந்த நூற் றாண்டில் அமெரிக்காவிலும் அவை தோன்றி வெகுவாக அபிவிருத்தியடைந்துள்ளன.

இந்தியாவில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழில் அபிவிருத்தி அதிக முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. தொழில் உற்பத்தி, தொழில் நுட்பம் முதலியவைகளில் உச்ச தரத்தை எட்டுவதற்கு நம் நாடு தீவிரமாய் முயன்று வருகிறது. தொழில் அபிவிருத்திக்கு இன்றியமையாத அடிப்படை, தொழில் நுட்பக் கல்வி. அது இப்போது விரிவாக அளிக்கப்பெற்று வருகிறது. அதற்குப் பல முறைகளைக் கையாளுகின்றனர். விஞ்ஞான பொருட்காட்சிச்சாலைகள் இந்த விஷயத்தில் பயனுள்ள சாதனமாக விளங்கும்.

தொழில் அபிவிருத்தியடைந்துள்ள எல்லா நாடுகளி லும் விஞ்ஞானப் பொருட்காட்சிசாலைகள் உள்ளன. கல்வி போதனையில் பொருட்காட்சிச்சாலைகளுக்குள்ள பங்கு எல்லாரும் தெரிந்ததுதான். நம் நாட்டு முன்ன ணித்தொழில் அதிபரான ஸ்ரீ ஜி. டி. பிர்லா கல்கத்தாவில்

உள்ள தம் சொந்த வீடான "பிர்லா பார்க்" மாளிகையை தொழில்-நுட்பப் பொருட்காட்சிச்சாலையை வைப்பதற்கு விட்டுத்தர முன்வந்தபோது இந்திய அரசாங்கத்தார் அதை நன்றியோடு ஏற்றுக்கொண்டார்கள். விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சிக் குழு இந்த ஏற்பாட்டை கவனிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பெற்றது. மேற்கு வங்க முதல் மந்திரி டாக்டர் பி. சி. ராய் தலைமையில் 12 அங்கத்தினர்கள் உள்ள திட்டக்குழு இதற்காக 1956-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பெற்றது.

இந்த மாளிகை உள்ள எஸ்டேட் 68,000 சதுர அடியும், 68,500 சதுர அடியுமுள்ள இரண்டு நிலங்கள் சேர்ந்ததாகும். பொருட்காட்சிச்சாலைக் கட்டிடம் மூன்று அடுக்குகள் கொண்டது. அதன் நிலப்பரப்பு 19,700 சதுர அடி. கட்டிடத்தைச் சுற்றி அழகான பூங்கா இருக்கிறது. அது ரம்மியமான சூழ்நிலையில் அமைந்திருக்கிறது. இக்கட்டிடத்தில் 1,900-ஆம் ஆண்டுக்கு முன் ஸ்ரீ சத்தியேந்திரநாத் தாகூர், ரவீந்திரநாத் தாகூர் ஆகியோர் வசித்திருந்திருக்கிறார்கள். எனவே இதற்கு சரித்திர முக்கியத்துவமும் இருக்கிறது. 1956 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இதற்கான காரியாலயம் ஏற்படுத்தப் பெற்றுத் திட்டவேலை தொடங்கியது.

காட்சிப் பொருள்கள்

இந்தப் பொருட்காட்சிச்சாலையில், (1) சமீபகால தொழில்நுட்ப அபிவிருத்திகள் (2) தொழில்நுட்ப அபிவிருத்தியால் மனித சமுதாயத்துக்கு ஏற்படும் நன்மைகள், (3) இந்திய தொழில்களில் நவீன தொழில்நுட்ப முறைகள் கையாளப்படுவது ஆகிய அம்சங்களைக் காட்சிப்பொருள்கள் இருக்கவேண்டுமென்று தீர்மானித்தனர். இதற்காக மின்சார செய்தித் தொடர்பு,

காட்டுகிற மின்சார விசை உற்பத்தி, வினியோகம் அணு பௌதிகம், ஒளியியல், போக்கு வரத்து சிவில் எஞ்சீனீயரிங்,ரசாயானத் தொழில்நுட்பம், சுரங்க-உலோக வேலை ஆகிய பிரிவுகள் தெரிந்தெடுக்கப்பெற்றுள்ளன. இவை தொழில் அபிவிருத்தியின் போக்கைப் பிரதிபலிக்கும்.

சமீப காலத்தில் விஞ்ஞானப் பொருட்காட்சிச்சாலைகள் எப்படியிருக்கவேண்டும் என்பதைப் பற்றிய கருத்து மாறுபாடடைந்திருக்கிறது. அவை இப்போது மாதிரிப் பொருள்களைச் சேகரித்துவைக்கிற வெறும் சேமிப்புக் கிடங்காக மாத்திரம் இல்லை. விஞ்ஞான-தொழில்நுட்ப பயிற்சி நிலையங்களாகவும் விளங்குகின்றன. காட்சிப் பொருள்கள் வைக்கப்பட்டுள்ள முறையானது படிப்படியாக கல்வி போதனையளிக்கிற விதத்தில் இருக்கிறது. சில கருவிகளைப் பார்வையாளர்களே இயக்கிப் பார்க்கலாம். உதராணமாக, மின்சார உற்பத்தி, அதன் தன்மைகள் சம்பந்தமான பகுதியைக் குறிப்பிடலாம். மண்ணெண்ணெய் பகுதியில் கனி எண்ணெய் சுரங்கத்தில் இருப்பதைக் கண்டுபிடித்துத் தோண்டி எடுக்கும் முறை விளக்கப்பட்டிருக்கிறது. நவீன சுத்திகரிப்புச்சாலை, பெட்ரோலியப் பொருள்கள் தயாரிப்பு ஆகியவை சம்பந்தமான காட்சிப் பொருள்களும் உள்ளன.

இப்பொருட்காட்சிச்சாலையின் நோக்கம் பார்வையாளர்கள் ஒரே தடவையில் அவ்வளவு தொழில்நுட்பத்தையும் கற்றுக் கொள்ளும்படிச் செல்வதல்ல. ஆனால், அவர்களுக்கு அங்குள்ள விஷயங்களில் ஆர்வமும் கவர்ச்சியும் எற்படும்படி செய்வதுதான். முக்கியமாக மாணவர்கள், முதியவர்கள் ஆகிய இருதரப்பார் கல்விப்போதனையும் கவனிக்கப்படுகிறது. மாணவர்களுக்கு வகுப்புகளும்

நடத்தப்படுகின்றன. விசேஷத் தேர்ச்சிபெற்ற சிப்பந்திகள் அவர்களுக்கு மாதிரிகளின் வேலை முறையை விளக்கிக் கூறுவார்கள். முதியவர்கள் விஷயத்தில் கவர்ச்சிகரமான ஜோடனைமுறை மூலம் ஆர்வம் உண்டுபண்ணப் பெறும். புதிய விஷயங்களைத் தெரிந்துகொள்வது மகிழ்ச்சிகரமான அனுபவம் என்பதை அவர்கள் உணரும்படி செய்வதே நோக்கம்.

பார்வையாளர்கள் காட்சிப் பொருள்களைத் தாங்களே இயக்கிப் பார்க்க அனுமதிக்கப்படுகின்றனர். அது ஒரு புதிய சோதனை முறை. இதனால் அவர்களுக்கு தன்னம்பிக்கை ஏற்படுகிறது. அக்கறையும் உண்டாகிறது

வீடாக இருந்த ஒரு கட்டிடத்தைப் பொருட்காட்சிச்சாலையாக மாற்றுவதற்குப் பல மாறுதல்கள் செய்யவேண்டியிருந்தது. சரியான வெளிச்ச வசதி, ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தற்போதுள்ளகட்டிடத்தின் நிலப்பரப்பு 33,000 சதுர அடியாக இருந்தபோதிலும், 23,000 சதுர அடிதான் பொருட்காட்சிச்சாலைக்கு ஏற்ற இடம். மீதி காரியாலயம், நூல் நிலையம், அரங்கு, ஆகியவைகளுக்குப் போய்விடும். மூன்றாவது திட்டகாலத்தில் 50,000 சதுர அடி நிலப் பரப்புள்ள பல அடுக்குக் கட்டிடத்தைக் கட்டத் திட்ட மிட்டிருக்கின்றனர்.

ஒவ்வொரு பொருட்காட்சிச்சாலையிலும் மாதிரிப் பொருள்களை அமைப்பது, ஜோடனை செய்வது ஆகிய காரியங்களுக்காகப் பட்டறைகள் இருக்கும். அங்கே மராமத்து வேலையும் நடக்கும். இந்தப் பொருட்காட்சிச்சாலையில் [illegible],000 சதுர அடியுள்ள தொழில் பட்டறை கட்டப்பட்டு வருகிறது. தாற்காலிகமாக கட்டிடத்துக்குள்ளே ஒரு தொழில் பட்டறை இருக்கிறது. சுவர் ஓட்டுகள்,

பட விளக்கங்கள் முதலியவைகளுக்காக கலை விளக்க ஸ்டூடியோ ஒன்றும் இருக்கிறது. புகைப்படம் பிடிப்பதற்காக ஒரு புகைப் படப் பிரிவும் ஏற்படுத்தப்பெறும். அது தயாரிக்கும் படங்கள் பொது மக்களுக்கு விற்கப்படும். பொருட்காட்சிச்சாலையில் தொழில்நுட்ப நூல் நிலையம் ஒன்றும், விஞ்ஞான நூல்நிலையம் ஒன்றும் அமைக்கப் பெறும். 2000 பேர் உட்காருகிறபடி காட்சி அரங்கொன்று அமைக்கப்படும், அங்கே திரைப் படம் சிலேடு காட்சிகள், விவாதங்கள், உரைக்கோவைகள் முதலியவை நடக்கும். சிற்றுண்டிச் சாலையும் ஏற்படுத்தப்பெறும்.

மாதிரிகளை சேகரிப்பது, தயாரிப்பது ஆகிய வேலை சிரமம் மிகுந்தது ஆகும். இந்தியாவில் இதற்கு முன் அது நடந்தது இல்லை. தொழிற் பட்டறையில் ஏராளமான மாதிரிப் பொருள்கள் செய்யபட்டுள்ளன. அந்நியச் செலாவணி தட்டுப்பாடு காரணமாக வெளிநாடுகளிலிருந்து மாதிரிகளை வாங்கமுடியவில்லை. பிரிட்டன் நன்கொடையாகத் தந்த ஊதுஉலை மாதிரியைக்கொண்டுவருவதற்குமாத்திரம்தான் அந்நியச் செலவாணி உபயோகிக்கப்பெற்றிருக்கிறது. மாதிரிகள் தயாரிப்பில் தேர்ச்சியுள்ளவர்கள் இதில் உழைத்தார்கள். உள்நாட்டுத் தயாரிப்பு மாதிரிகள் சில வெளிநாட்டு மாதிரிகளுக்குச் சமமான ரீதியில் நன்ருக இருக்கின்றன. பொருட்காட்சிச்சாலைப் பட்டறையிலேயே மாதிரிகளைத் தயாரிப்பதுதான் சிறந்த முறை. ஆனுல், அதற்குச் சிறிது காலம் பிடிக்கும். ஏனென்ருல், தக்க கைவினைஞர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். துல்லிய கருவிகளை வெளிநாடுகளிலிருந்து வாங்க வேண்டும். மாதிரிகள் நிரந்தரமானவையல்ல. விஞ்ஞானத்துறையில் புதிய அபிவிருத்திகள் ஏற்படும் போது புதியவைகளைச் செய்யவேண்டியது வரும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இப் பொருட்காட்சிச்சாலையின் மூலதன, நடைமுறைச் செலவுகளுக்காகத் 20 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்.

நாம் உத்தேசிக்கிறபடி பொருட்காட்சிச்சாலைகளை ஒன்றிரண்டு வருஷங்களில் நிர்மாணித்துவிடமுடியாது. எனவே, நம்மிடமுள்ள காட்சிப் பொருள்களையும் மாதிரிகளையும் வகைப்படுத்தி அடுக்கிவைத்து மக்களுக்குப் பார்வையிடச் சந்தர்ப்பம் அளிக்கத்தீர்மானித்திருக்கிறது. தற்போது மின்சாரம், உலோக வேலை, எலெக்ட்ராக்விஸ், அணுபௌதிகம், பெட்ரோலியம் டெலிவிஷன் முதலியப் பிரிவுகள் அமைக்கப் பெற்றுள்ளவை. மீதியுள்ள பொருள்கள் பலவகைப் பிரிவில் வைக்கப்படுகின்றன.

உலகிலுள்ள இதர பொருட்காட்சிச்சாலைகளைப் போலவே இதற்கும் பொதுமக்களின் நன்கொடைகள் மூலம் கிடைக்கிற காட்சிப் பொருள்கள் தேவைப்படும்; பொது மக்கள் பொருள்களைத் தந்து உதவுவார்கள் என்பதில் ஐயமில்லை.

பிரபஞ்ச ரகசியம்

ராஜாஜி

டார்வினுடைய பெயர் மிகவும் பிரசித்தமானது. விஞ்ஞானிகளிடையே அவர் ஒரு முனிவர். அவர் விஞ்ஞானத்தில் மட்டிலும் பெரிய உழைப்பாளியல்லர். மிகவும் நல்ல மனிதர்; மேதைக்கும் உழைப்புக்கும் அவர் எவ்வளவு தூரம் மதிக்கப்பட்டு வந்தாரோ அதேமாதிரி அந்தரங்க சுத்திக்கும், முனிவர் போன்ற ஒழுக்கத்திற்கும் அவர் போற்றப்பட்டு வந்தார். அவரும் அவர் காலத்தில் வாழ்ந்த மற்றவர்களும் ஒரு பரிணாமதத்துவத்தை வகுத்தனர். செடிகள், பூச்சிகள், மீன்கள் முதலிய பற்பலவிதமான எல்லாம் எப்படிப் பிறந்தன என்பதை விளக்கும் பொருட்டுப் பரிணாமதத்துவத்தை ஆராய்ச்சிகள் மூலம் பரிசோதித்து வந்தனர். ஓர் இனத்திலிருந்து பல இனங்கள் வளருகின்றன. இவ்விதம் பற்பலவிதமான உயிரினங்கள்—எண்ணற்ற உயிரினங்கள் பிறந்தன என்பதே இந்தத் தத்துவம். கடவுள் மனிதனையும் மற்ற உயிரினங்களையும் ஒன்றாகப் படைத்தாரென்று பைபிளின் (பழைய டெஸ்ட்மெண்டில்) பழைய ஏற்பாடு முதலாவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது.

டார்வினின் சித்தாந்தத்தின் பிரகாரம் இந்த விதமான வியாக்கியானத்தை நாம் நம்புவதில்லை. மேற்கு நாடுகளிலுள்ள வைதிக கிறிஸ்துவர்களெல்லோரும் இந்த விதமான அனுமானங்களை எல்லாம் மதப்பற்றில்லாதவை என்று கண்டித்தது இயற்கையே.

இந்தியாவில் மத வேதாந்தாசாரியார்கள் சண்டை போட்டுக் கொள்ளவில்லை. பரிணாமம் மூலம் கடவுள் தனது காரியத்தைச் செய்து வருகிறார் என்று தொன்று தொட்டே ஏற்றுக்கொண்டு வந்துள்ளனர். இந்திய வேதாந்திகள் சிந்தித்தபடி இந்தியாவில் பரிணாமதத்து வம் கடவுள் இருப்பதை ஒப்புக்கொள்ள மறுக்க வில்லை.

ஓர் இனத்தைச் சேர்ந்த செடி முளைத்திருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். தற்செயலாகவோ அல்லது ஏதோ காரணத்தாலோ அதன் தாய்ச் செடியிலுள்ள கிளைகளைப் போல் அல்லாமல் உருவத்தில் சிறிது மாறுதலான, வேறுவிதமான இலைகளை அது விடுகிறது. இம் மாறுபாட்டினால் அதிகமான சூரிய கிரணங்களை அது இழுத்துக்கொள்ள உதவுகிறது. இதனால் இந்தச் செடி வளர்ந்து இந்த இனச் செடி செழித்து ஓங்கிப் பெருகுகிறது. இதனால் புது இனமான ஒரு செடி தோன்றுகின்றது. பலத்தினால் பிழைத்த சித்தாந்தத்தின் மூலம் ஒரு புது இனம் பிறந்ததையும் அது காப்பாற்றப்படுவதையும் இந்த உதாரணம் காட்டுகிறது. செடியிலும் பிராணி வாழ்க்கையிலும் மாறுபாடுகள் ஏற்பட்டன. அந்தச் சூழ்நிலையில் உயிர் வாழ்வதற்கு அதிகத் தகுதி இருந்ததால் இந்த இனங்கள் செழித்தோங்கிப் பெருகின. இவ்விதமே உலகில் எண்ணற்ற உயிரினங்கள் இருந்துவருகின்றன. இன்றும் தோன்றி வருகின்றன.

பெற்றோரின் குண விசேஷங்களைக் குழந்தைகளும் அடைகின்றன என்பது பற்றி உங்கள் எல்லோருக்கும் தெரியும்; எப்பொழுதாவதுதான் மாறுபாடு காணப்படுகிறது. போஷாக்கு சக்தியைப் பெறுவதற்கும் வாழ்வதற்குமான இந்தப் போராட்டத்திற்கு இம்மாறுபாடு உதவுகிறது. இது நிரந்தரமாகி ஒரு புது இனத்திற்கான அடிப்படையாகிவிடுகிறது. இதுதான் பலவானே பிழைப்பதன்

மூலம் உயிரினங்கள் சுயமாகவே பரிணமிக்கும் சித்தாந்தம். இந்தச் சித்தாந்தம் மிகவும் நன்றாக எடுத்தத்துக் காட்டப்பட்டு மிகவும் அழகாக விளக்கப்பட்டது. விஞ்ஞானமே இதைப் பிரமாணமாக எடுத்துக்கொண்டு பலவானே பிழைக்கிறான் என்ற சித்தாந்தத்தை ஒரு புது பைபிளாகக் கருதியது. இது தவறானதென்றோ அல்லது சந்தேகமானதென்றோ நான் இங்கே எடுத்துக் கூறப்போவதில்லை. பிரபஞ்சத்தின் ரகசியத்தைப் பரிணாமதத்வதும் விளக்கிக் கூறுவதில்லை. அதைத் தாண்டித்தான் செல்கிறது என்பதையே நான் சொல்ல விரும்புகிறேன்.

செத்த பொருளிலிருந்து உயிர் எப்படிப் பிறந்தது? உயிரற்ற ஜடப்பொருள் உயிருள்ள ஜீவஅணுவிலிருந்து கொஞ்சம் மாறுபாடானது. உயிருள்ள ஜீவ அணு தனது சுற்றுப் புறங்களிலிருந்து வேண்டியதை எடுத்துக் கொண்டு வளர்ந்து தன்னைத் தானே போஷித்துக் பெருகி, அழிவே இல்லாமல் வாழ்கிறது என்று சொல்லலாம். உயிருள்ள ஜீவ அணு பிறந்ததாக நாம் வைத்துக் கொள்கிறோம். இதிலிருந்து நாம் சித்தாந்தம் வகுத்துப் பரிணாமதத்துவம் மூலம் மீதமுள்ள உயிருள்ள உலகத்தை நிர்மாணித்து விடுகிறோம். பரிணாமதத்துவத்தின் பிரதான அடிப்படை வம்சபரம்பரைக்கொள்கை அல்லது பெற்றோர்களின் குணவிசேஷங்களைக் குழந்தைகள் அடைவது (செடிகளிலும் பிராணிகளிலும் கூட) இருந்த போதிலும் இதற்குச்சமமாக உள்ள டார்வின் சிந்தாந்தத்திலிலுள்ள முக்கியமான அடிப்படை, பாரம் பரியக் கொள்கைக்கு முற்றிலும் மாறுபாடான விளக்கிக் கூற முடியாத நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சியிலும் அவைகளில் பல முள்ளவையே உயிர் வாழ்கின்றன என்பதை ஆதாரமாகக் கொண்டதுதான் டார்வினின் சித்தாந்தம்.

இயற்கை ஒரு புதிய இனத்தை உற்பத்தி செய்ய விரும்பும். இந்த மாறுபாட்டு நிகழ்ச்சியை டார்வினின் சித்தாந்தம் விளக்கிக் கூருமல் மர்மமாகவே வைத்திருக்கிறது. இவ்விதம் வாழ்க்கையின் ரகசியத்தை இயற்கையாகத் தேர்ந்தெடுக்கும் சித்தாந்தம் தாண்டிச் செல்கிறது.

தெரியாது இரண்டு மூலைகளில் பலவந்தமாக திணிக்கப்படுகிறது. (1) உயிரில்லாததிலிருந்து உயிர் பிறக்கும் நிகழ்ச்சி, (2) புது உயிரினங்கள் பிறக்கச் சாதகமான சூழ்நிலையை ஆரம்பிக்கும் மாறுபாட்டு நிகழ்ச்சி. விஞ்ஞானம் எவ்வளவுதான் மிகவும் கவர்ச்சிகரமான முறையில் அபிவிருத்தி அடைந்தாலும் கூட, வாழ்வின் ரகசியம் இன்னும் புரியாமல் இருக்கிறதென்பதை எடுத்துக்காட்டவே இதை எல்லாம் நான் கூறினேன்.

'என் அருமை மகனே! இந்த அதிசயமான உலகம் ஒன்றுமில்லாத பொருளிலிருந்து பிறந்திருக்க முடியாது. " அஸத் " " ஸத்தை " சிருஷ்டிக்க முடியாது. " ஸத் " தான் " ஸத் " ஐ உண்டாக்க முடியும். எனவே நம்பு' என்று சந்தோக்ய உபநிஷத்தில் ரிஷி கூறியிருக்கிருர். இதையே நானும் உங்களுக்கு எடுத்துக் கூறுகிறேன். அந்தச் சத்தியம் இன்றும் நிலைக்கிறது. அபாரமான விஞ்ஞான ஆராய்ச்சிகளினுல் கடவுள் இல்லை என்று நிதர்சனமாகிறது என்று நினைத்து மூளையைக் குழப்பிக் கொள்ள வேண்டாம். இந்த அதி அற்புதங்களெல்லாம் இதைக்காட்டிலும் அதி அற்புதமான ஏதோ ஒன்றிலிருந்து வரவேண்டும். அது தான் கடவுள். இந்த விதமான சுலபமான விவேகம் மனிதனைப் போல் அவ்வளவு பழமையானது. இதை அஸ்திவாரமாகக்கொண்ட எல்லா மதங்களும்தான் இன்னும் ஏற்கக் கூடியனவாக இருக்கின்றன.

கல்வித் துறையில் கூட்டுறவு

ராப் மாக்ஸ்பீல்டு

ஒரு நாள் வட இங்கிலாந்துப் பகுதியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். கனைவைச் சேர்ந்த அதிகாரி ஒருவரும் ஆங்கில ஆசிரியர் ஒருவரும் என்னுடன் பிர யாணம் செய்தார்கள். 'நான் படித்த பல்கலைக்கழகத்தைக் காண விரும்புகிறேன்' என்று பேச்சு வாக்கில் கனை அதி காரி கூறினர். 'எது?' என்று கேட்டார் ஆங்கில ஆசிரியர். 'டர்ஹாம்' என்று பதில் கிடைத்தது. 'நானும் அங்கு படித்தவன் தான்' என்று கூறினர் ஆசிரியர்.

அவர்களுடைய பேச்சு வளர்ந்தது. இவரும் பள்ளி நாள் நிகழ்ச்சிகளை நினைவுபடுத்திக்கொண்டு பேசி மகிழ்ந் தார்கள். காமன்வெல்த் மக்கள் கல்வித்துறையில் மூலம் உறவு பூண்டிருப்பதை அப்போது கண்டேன். பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களிலும் தொழில் கல்லூரிகளிலும், வேறு பல துறைகளிலும் சுமார் 27,000 காமன்வெல்த் மாணவர் கள் பயிலுகிருர்கள். மற்றக் காமன்வெல்த் நாடுகளிலும் வெளிநாட்டு மாணவர்கள் (இவர்களில் பலர் காமன் வெல்த்தைச் சேர்ந்தவர்களே) கல்வி பயிலுகிருர்கள். காமன்வெல்த்திலுள்ள வெளிநாட்டு மாணவர்கள் எண் ணிக்கை சுமார் 50,000. எதிர்காலத் தலைவர்களில் பலர் இந்த மாணவர்களிடையே இருக்கக்கூடும் என்று எண் ணும்போது எதிர்காலத்தில் காமன்வெல்த் உறவு சிறப் புற்ருேங்கும் என்று தோன்றுகிறது.

கல்வித்துறையில் காமன்வெல்த் நாடுகளின் உறவும் தொடர்பும் பெருகுவதற்கு ஆவனசெய்யவேண்டுமென்று சென்ற செப்டம்பரில் கானடாவில் நடந்த காமன்வெல்த் வாணிப-பொருளாதார மகாநாட்டில் தீர்மானித்தனர். அதன் விளைவாக, ஆக்ஸ்போர்டில் காமன்வெல்த் கல்வி மகாநாட்டை நடத்த முடிவாயிற்று. காமன்வெல்த்-காலனி நாட்டுப் பிரதிநிதிகள் இதில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். கல்வித்துறையில் காமன்வெல்த் நாடுகளுக்குள் இப்போதுள்ள கூட்டுறவைப் பரிசீலனை செய்வதுடன் அடுத்த சில ஆண்டுகளுக்குள் மேலும் 1000 மாணவர்கள் பயிலுவதற்கான திட்டம் ஒன்றை தயாரிப்பதே இந்த மகாநாட்டின் முக்கிய நோக்கம். தொழிற் கல்வி, பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உதவுதல், பல்கலைக் கழக ஆசிரியர்கள் பரிவர்த்தனை முதலிய விஷயங்களுக்கு முதலிடமளித்து விவா சுகப்படும்.

கல்வித்துறையில் பிரிட்டனுக்கும் காமன்வெல்த் நாடுகளுக்கும் நெரு ிய உறவுண்டு. ஆங்கில மொழி பயின்றவர்கள் உயர்தரப் பயிற்சி பெற பிரிட்டனுக்கு வருகிறார்கள். இரண்டாண்டுக்குமுன்பு, சென்னை, பம்பாய் கல்கத்தா பல்கலைக் கழகங்கள் நூற்றாண்டு விழா கொண்டாடினார்கள். இவையும் காமன்வெல்த்திலுள்ள பல்கலைக் கழகங்களும், பிரிட்டிஷ் கல்விஸ்தாபனங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவை. மொழியும் மரபும் காரணமாக விலை மதிப்பிடமுடியாததோர் உறவு ஏற்பட்டு விட்டது.

நபீல்டு ஸ்தாபனம், ரோட்ஸ் அறக்கட்டளை, பிரிட்டிஷ் கௌன்சில் காமன்வெல்த் பல்கலைக் கழகச் சங்கம் ஆகிய ஸ்தாபனங்கள் கல்வி மூலம் காமன்வெல்த் உறவு வளரத் தொண்டாற்றுகின்றன. இவை பல்வேறு மான்யங்களை வழங்கி காமன்வெல்த் மாணவர்களுக்கு உதவி

செய்கின்றன. ஆராய்ச்சித் துறையிலும், தொழிற் பயிற்சியிலும் காமன்வெல்த் மாணவர்களுக்கும் உதவபல்வேறு ஏற்பாடுகள் உண்டு. இவை அனைத்தையும் ஒருமுகப் படுத்தி சிறந்த முறையில் அமைப்பது பற்றி, ஆக்ஸ்போர்டு மகாநாட்டில் சிந்திப்பார்கள்.

கல்வியைப் பரப்ப, பயிற்சி பெற்ற ஆசிரியர்களுடைய தொண்டு அவசியம். ஒவ்வொரு நாட்டிலும், மக்கள் விழிப்புற்று கல்வி பயிலத் துடிக்கிறார்கள். ஆனால் தேவைக்கேற்றபடி ஆசிரியர்கள் எண்ணிக்கை பெருகவில்லை. போருக்குப் பின்னர் இந்தியாவில், கல்வி விஸ்தரிப்பு முயற்சி தோன்றிற்று என்றாலும் அங்கு படித்தவர்கள் எண்ணிக்கை 25 சதம்தான். ஆப்பிரிக்காவிலுள்ள காமன்வெல்த் நாடுகளில் தீவிரக் கல்வித் திட்டத்தை நிறைவேற்ற 200,000 ஆரம்ப ஆசிரியர்கள் தேவை என மதிப்பீடு செய்திருக்கிறார்கள்.

காமன்வெல்த் நாடுகளின் கூட்டு முயற்சியால் இந்தச் சிக்கலை வெல்ல முடியும் என்று கருதுகிறேன். ஒவ்வொரு நாடும் ஏதாவது ஒரு வகையில் உதவ முடியும். இந்தியாவும் கனவும் முதியோர் கல்வித் திட்டம் பற்றி யோசனை கூறக்கூடும். ஆக்ஸ்போர்டு மகாநாட்டில் எதிர் நோக்கியுள்ள பிரச்னைகள் அனைத்துக்கும் விடை காண முடியாது. ஆயினும் பொதுவாக விவாதிக்கவும் திட்டம் வகுக்கவும் உதவக்கூடும். எதிர்காலத்துக்கு வழிகாட்டும் முறையில் ஆக்ஸ்போர்டு நிகழ்ச்சி அமையக்கூடும்.

டில்லியில் பறவை வாழ்க்கை

மால்கம் மக்டொனல்டு

[இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் ஸ்ரீ மால்கம் மக்டோனல்டு டில்லியில் நிகழ்த்திய வானொலிப் பேச்சு.]

ஓய்வு நேரத்தைச் சிறப்பாகச் செலவிடக் கற்றுக் கொண்டால் எங்கிருந்தாலும் வாழ்க்கையை இனிமையாகக் கழிக்க முடியும். இயற்கைக் காட்சிகளை அனுபவிப்பது சிறந்ததோர் பொழுதுபோக்கு. பறவைகளின் வாழ்க்கையை கவனிப்பது மனத்திற்கு இனிய தொழிலாகும். பறவைகளின் வாழ்க்கையை கவனிப்பதில் பணச் செலவில்லை, பிரயாண அலுப்பில்லை. வீட்டைச் சுற்றியுள்ள தோட்டத்திலும் கழனியிலும் சுற்றித் திரிந்தால் எத்தனை எத்தனையோ பறவைறகளைப் பார்க்கலாமே!

பறவைகளின் வாழ்க்கையைக் கவனித்து மகிழ, டில்லி நகரம் சிறந்ததோர் இடமாகும். இங்கு பல நாட்டுப் பறவைகள் வருன்றன. கழுகு, பருந்து, பெருநாரை முதலிய பெரியபறவைகளையும், வெண்குருவி, தேன்சிட்டு போன்ற குருவிகளையும் இங்கு காணலாம். உள்ளான், குருவி, செங்கால் நாரை போன்ற நீர்ப்பறவைகளையும், வலியன், போத்து முதலிய பறவைகளையும், ஆந்தை, கூகை போன்ற ராச்சஞ்சாரிகளையும் இங்கு காணலாம். சில பறவைகள் ஆண்டு முழுவதும் இங்கு தங்குகின்றன. சில பறவைகள் பருவகாலத்தில் வந்துபோகின்றன.

உதாரணமாக பனிக்காலத்தில், டில்லியைச் சுற்றியுள்ள கழனிகளிலும், ஏரிகளிலும்காணப்படும் காட்டுவாத்துகள் மத்திய ஆசியாவைச் சேர்ந்தவை. பனிக்காலம் முடிந்ததும் இவை மத்திய ஆசியாவுக்குச் சென்று விடும். ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஒருவகை குக்குறுவான் கோடை காலத்தில் டில்லிக்கு விஜயம் செய்து, தவிட்டுக் குருவிகள் கட்டிய கூடுகளில் முட்டையிடுகின்றன.

என்னுடைய தோட்டத்திள்ள பறவைகளைத் தவிர மற்றப்பறவைகளை நான் கண்ணெடுத்துப்பார்ப்பதில்லை. வெளியில் பறக்கும் பறவைகளைப் பார்க்கத் தொடங்கினால் என் அலுவலைக் கவனிக்க நேரம் கிடைக்காது. வெளி விவகார அமைச்சகத்திலுள்ள அறிவுக் குருவிகளுடன் தென்கிழக்கு ஆசியா பிரச்னைகளையும் ஜலவாயுக்குண்டுகளைப் பற்றியும் வேறு பல சிக்கல்களைப்பற்றியும் விவாதிக்க நேரமிராது.

சென்ற ஈராண்டுகளில், என் தோட்டத்திலேயே 127 வகைப் பறவைகளைப் பார்த்திருக்கிறேன். அவ்வப்போது புதிய பறவைகள் விஜயம் செய்யும். சென்ற வாரத்தில் ஒரு நாள் 'பாரடைஸ் .˙ பிளைகாட்சர்' என்ற பறவையைக் கண்டேன். நீண்டவாலும் அழகான நடையுமுள்ள இந்தப் பறவை இமயச்சாரலிலிருந்து, ஆண்டுக்கொருமுறை சமவெளிப் பிரதேசத்திற்கு வருகிறது.

பறவைகளுடைய வாழ்க்கையைக் கவனிப்பதில் தனி இன்பமுண்டு. மனித சமூகத்தைப் போல, பறவை இனத்திலும் காதலும், போரும், வெறுப்பும், அன்பும். தாய்மையும், தியாகமும் நிறைந்த நிகழ்ச்சிகள் உண்டு. பறவைகள் கூடுகட்டி வாழத் தொடங்கும்போதுதான் அவற்றின் இயல்பையும், உணர்ச்சியையும் கண்டுகளிக்க முடியும். டில்லியில், பல இனப் பறவைகள் வாழ்வதால்,

ஆண்டில் ஒன்பது மாதங்களுக்கு கூடுகட்டி குஞ்சு பொரிக்கும் காலத்தை கண்டுகளிக்க முடிகிறது.

சென்ற சில தினங்களில், என் தோட்டத்திலுள்ள முப்பது கூடுகளைக் கவனித்துவந்தேன். இவற்றிலே மூன்று பச்சைக்கிளிகளின் கூடுகள், இரண்டுகொண்டை நாரைகள் கட்டியவை. மைனுக்கள் கட்டிய கூடுகள் சில. புல்புல் குருவிகள் கூடுகள் சில. ஒரு கூட்டில் நான்கு முட்டைகள் இருந்தன. ஒரு கூட்டில் இறக்கை முளைக் காத குஞ்சுகள் சில இருந்தன. இரண்டு கூடுகளில் முட்டைகள் இருந்தன. ஒரு நாள் அவை காலியாகயிருப் பதைக் கண்டேன். பசி மிகுந்த காக்கையோ, செம் போத்தோ, அவற்றிலிருந்த முட்டைகளைத் திருடித் தின்றிருக்கவேண்டும்.

தோட்டத்திலுள்ள ஒரு மரத்தில் 'டெய்லர்' குருவி கள், அகன்ற பெரிய இலைகளை இணைத்துத் தைத்து குடி யிருப்பு வசதி செய்து கொண்டு வாழ்கின்றன. சென்ற வாரத்தில் அவற்றின் குஞ்சுகள் தத்திப் பறப்பதைக் கண்டேன். தினந்தோறும் தாய்க்குருவி வெளியே பறந்து சென்று இரை தேடிக்கொடு வந்து குஞ்சுகளுக்கு ஊட்டு வதையும் காண்கிறேன்.

இப்போது எங்கள் காய்கறித்தோட்டத்தில் இரண்டு செஞ்சிட்டுகள் மும்முரமாகக் கூடுகட்டிக்கொண்டிருக்கின் றன. அருகிலுள்ள ஓர் பூச்செடிப் புதரில் வாழும் ஒரு ஜோடி செஞ்சிட்டுக்கள் இறக்கை முளைக்காத குஞ்சு களுக்கு பறந்து பறந்து இரை ஊட்டிக்கொண்டிருக்கின் றன. தாழ்ந்த மரக்கிளை ஒன்றில் பெட்டைச் செங்குருவி ஒன்று, நாள் முழுதும் உழைத்து மாங்காய் உருவத்தில் ஓர் கூட்டை அமைத்துக்கொண்டிருக்கிறது. அதனுடைய

இணைக்குருவியோ துரும்பைக்கூடத் தூக்காமல், மற்றோர்கிளையில் அமர்ந்து, இனியகுரல் எழுப்பிப் பாடி தன் மனைவியை உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கிறது.

இரண்டு ஜோடி மஞ்சள் மைனாக்கள், படரும் கொடியின்கீழ் பந்துபோல புற்களைப் பரப்பிவிட்டு, காதல்கீதம் பாடிக்கொண்டிருக்கின்றன. காதல் விளையாட்டு முடிந்ததும் அவை கூடுகளில் குடியேறிவாழும். மற்றோரிடத்தில் ராபின் குருவி ஒன்று, அடைகாத்துக் கொண்டிருக்கும் தன் பேடுக்கு ஓடி ஓடி வந்து இரை கொடுத்துக்கொண்டிருக்கிறது, வீட்டுக்கருகில் ஓங்கி வளர்ந்திருக்கும் ஆஸ்திரேலிய ஓக் மரத்தின் உச்சாணிக் கொம்புகளில் மணிப்புருக்கள் கூடுகட்டி வாழ்கின்றன. வீட்டின் புறமதிலிலுள்ள ஓர் பொந்தில் இரண்டு ஆந்தைகள் வாழ்கின்றன.

என்னுடைய தோட்டத்தில் சலுப்பன் குருவிகளும், வாலாட்டிச் சிட்டுகளும் உண்டு. அடுத்த சில வாரங்களில் கொண்டைலத்தி, செம்போத்து, மணிப்புரு, முதலியவை கூடுகளை அமைக்கத் தொடங்கும். உயர்ந்த கிளைகளில் காகங்கள் கூடு கட்டுவதையும் அவற்றில் குயில்கள் தங்கி முட்டையிடுவதையும் இனிமேல் காணமுடியும். ஆண்டுதோறும் நடைபெறும் நிகழ்ச்சி இது. திருட்டுக் குயில் காக்கை முட்டைகளை அப்புறப் படுத்திவிட்டு, தன்னுடைய முட்டையை வைத்துச் செல்லும். அப்பாவிக் காகம் அவற்றை அடைகாத்து குஞ்சு பொரிக்கும். குஞ்சுகளுக்கு இரைகொடுத்து ஊட்டி வளர்க்கும் நிலை வந்து அவை குரல் எழுப்பும்போதுதான், வேற்றினம் எனத் தெரிந்துகொண்டு அந்தக் குஞ்சுகளை விரட்டியடிக்கும்.

என் வாழ்க்கைத் தத்துவம்

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

நம் உலக வாழ்க்கையே ஓர் அதிசயம்தான். நம்மில் ஒவ்வொருவரும் குறைந்த கால தாமசத்துக்கே இவ்வுல குக்கு வருகிறோம். நாம் எதற்காகவருகிறோம் என்பதைத் தெரியாமல்தான் வருகிறோம். ஆனால் சில சமயங் களில் நாம் தெய்வீகச் செயல் புரிவதாகக்கூட நினைக் கிறோம்.

நம்முடைய அன்றாட வாழ்க்கைக் கண்ணோட்டத் தைக் கொண்டு பார்ப்போமானால் ஒன்றுமட்டும் நமக்கு நன்றாகத் தெரிகிறது. அதாவது மனிதன் மற்றவர் களுக்காகத்தான் வாழ்கிறான். அதிலும் நாம் யாருடைய புன் முறுவலிலும், நல் வாழ்விலும் சுகம் காண்கிறோமோ. அவர்களுக்காகத்தான் நாம் வாழ்கிறோம். மேலும் ஒரு வருக் கொருவர் உதவி செய்யும் இந்த அன்புப் பிணைப் பினால் கட்டுண்டிருக்கும் மற்ற எண்ணற்ற மக்களுக்காக வும்தான் நாம் வாழ்கிறோம்.

ஒரு நாளில் பல தடவைகள், நான் என்னுடைய அக வாழ்வும் புறவாழ்வும் பிறருடைய உழைப்பை எவ் வளவு தூரம் சார்ந்திருக்கின்றன என்பதைப் பற்றி நினைப்பதுண்டு. அவர்களிடம் இருந்து பெறும் நன்மை களுக்குப் பிரதியாக அரும்பாடுபட்டு நான் திருப்பித் தர வேண்டும் என்று எண்ணுவதுண்டு. நான் பிறருடைய உழைப்பை நிறையக் கடன் வாங்கிவிட்டேன் என்பதை

எண்ணுந்தோறும் என் மனம் சஞ்சலப்படுகிறது; என் மன அமைதி குலைந்துவிடுகிறது.

தத்துவ ரீதியில் நாம் சுதந்திரத்தோடு வாழலாம் என்று எண்ணுவதற்கும் முடியாது. ஏனெனில் புற உலகக் கட்டு திட்டங்களுக்கு மட்டுமின்றி நம்முடைய சொந்த அத்தியாவசியங்களைப் பொறுத்தும் நாம் செயல்புரிகிறோம்.

'மனிதன் எதைச் செய்ய நினைக்கிறானோ அதைச் செய்யக்கூடும்; ஆனால் தான் எதை விரும்புகிறான் என்பதைத் திட்டமிட்டுக் கூறத்தான் முடிவதில்லை' என்ற சோபனேரின் வாக்கு என் இளம்பிராயத்திலேயே என் மனத்தில் நன்றாகப் பதிந்துவிட்டது. வாழ்க்கையின் கஷ்ட நிஷ்டூரங்களை அனுபவிக்க நேர்ந்த பொழுதும் எனக்கு அம்மொழிகள் ஆறுதல் அளித்தன. இந்த எண்ணம் பொறுமையின் பிறப்பிடமாக இருந்து வருகிறது. ஏனெனில் இது நம்மைப் பற்றியோ பிறரைப் பற்றியோ பிரமாதமாக எண்ணத் தூண்டுவதில்லை. மேலும் இது ஹாஸ்ய ரசனையைத்தான் வளர்க்கிறது.

சதா சர்வகாலமும் மனித ஜன்மத்தின் அர்த்தத்தையும் மனித வாழ்வின் அவசியத்தையும் பற்றிய விசாரத்தில் இறங்குவது, காரியார்த்தமாகப் பார்க்கப் போனால், சர்வ முட்டாள் தனமாகத்தான் படுகிறது. இருந்தும் ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று சில லட்சியங்களை வைத்திருக்கிறான். அதன்படியே தன் அபிலாஷைகளையும் தன் தீர்ப்புகளையும் உருவாக்கிக் கொள்கிறான். நன்மை அழகு, சத்தியம் முதலிய லட்சியங்கள்தான் என்முன் என்றைக்கும் பிரகாசித்துக் கொண்டு என் வாழ்க்கையை இன்ப மயக்குகின்றன. வசதியான வாழ்க்கையும் சந்தோஷமான வாழ்வையும் வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகக் கொண்டிருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. இதை

அடிப்படையாக கொண்டிருக்கும் திட்டம் ஆடு மாடுகளுக்குத்தான் பொருத்தமானது.

கலை, விஞ்ஞான ஆராய்ச்சி முதலிய சாதனைகளில் ஈடுபட்டிருக்கும் மனப் போக்கு உடையவர்களுடன் சேர்ந்து பழகும் எண்ணம் இல்லாமலிருந்தால் என் வாழ்க்கை சூன்யமாகியிருக்கும். என்னுடைய குழந்தைப் பிராயத்திலிருந்தே, மனித அபிலாஷைகளுக்கு விதிக்கப்படும் சாதாரண கட்டுப்பாடுகளையும் நான் வெறுத்தே வந்திருக்கிறேன். பொருள்களைச் சேகரிப்பது, உலகத்தோர் மதிக்கும் கீர்த்தி, விளம்பரம், டாம்பீக வாழ்க்கை முதலியன எனக்குப் பிடிப்பதே இல்லை. சாதாரண, படாடோபமற்ற வாழ்க்கைதான் உடலுக்கும் உள்ளத்துக்கும் உகந்ததாயிருக்கிறது என்று நினைக்கிறேன்.

சமூக ஞாயத்திலும் சமூகப் பொறுப்பிலும் எனக்கு உள்ள தீவிரமான ஆர்வம், ஆண் பெண்களுடன் நேரடியாகப் பழகும் விருப்ப மற்ற என் நிலைக்கு நேருக்கு மாருகவே இருந்து வந்திருக்கிறது. நான் தனி நுகத்தடியில் பூட்ட வேண்டிய குதிரை; கூட்டத்தோடு சேர்ந்து வேலை செய்ய தகுதியற்றவன். நான் எந்த நாட்டுக்கும் அரசாங்கத்துக்கும் என் நண்பர் குழாத்துக்கும் என் குடும்பத்துக்கும்கூட உரியவன் என்று நான் மனப்பூர்வமாக நினைத்தது கிடையாது. மேற்சொன்னவற்றுடன் சேர்ந்திருப்பது ஒரு பிரிவு உணர்ச்சியையும் உண்டு பண்ணுகிறது. நான் என்னுடனேயே இருக்க வேண்டும் என்கிற விருப்பம் காலத்தோடு அதிகரித்துக்கொண்டே வருகிறது.

இந்தத் தனிமையான வாழ்க்கை சில சமயங்களில் கசப்பாக இருக்கும். ஆனல் பிறமனிதர்களுடைய சகிப்புத் தன்மையிலிருந்தும் விட்டுக் கொடுக்கும் சுபாவத்தி

லிருந்தும் விடுபட்டிருப்பதைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. தனி வாழ்க்கையில் நான் சிலவற்றை இழக்கிறேன். ஆனால் நிச்சயமாக பிறருடைய பழக்க வழக்கங்கள், அபிப்பிராயங்கள், விருப்பு வெறுப்புகள் முதலியவற்றினால் பாதிக்கப்படாமல் நான் சுதந்திரத்தோடு வாழ முடிவதால் நான் அந்தக் குறைக்குத் தக்க ஈடு பெறுகிறேன். மேலும் அடிக்கடி மாறுகின்ற அந்த விஷயங்களில் என் மன அமைதியைச் செலவழிக்க விரும்பவும் இல்லை.

என்னுடைய அரசியல் லட்சியம் ஜனநாயகம்தான். ஒவ்வொருவரும் மதிக்கப்பட வேண்டும். ஆனால் ஒருவரை யாவது நாம் கடவுளாக ஆக்கிக் கோயில் கட்டிப்போற்றக் கூடாது. வேண்டப்படாத, தகுதியற்ற, புகழையும் பெரு மதிப்பையும் எனக்குக் கொடுக்கிறார்கள். இதுவே வாழ்க்கையின் விநோதம் போலும்! மற்றவர்கள் இப்படிப் போற்றுவது, என்னுடைய அற்ப சக்தியைக் கொண்டு நான் கண்டு பிடித்துள்ள விஷயங்களைத் தாங்களும் கண்டுபிடிக்க வேண்டும் என்கிற தங்கள் நிறைவேறாத விருப்பங்களிலிருந்துதான் உண்டாகியிருக்க வேண்டும்.

என்னுடைய திட்டவட்டமான நோக்கத்தைக் கைவரப்பெற ஒரு மனிதன் நன்றாகச் சிந்தனை செய்ய வேண்டும். தலைவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்களை விரட்டக்கூடாது. அவர்கள் தங்களுடைய தலைவர்களைத் தேர்ந்தெடுகக அனுமதி அளிக்க வேண்டும். சமூகத்தில் உள்ள வகுப்புப் பிரிவினைகள் அத்தனையும் பொய். அதைப்பற்றி நுணுக்கமாக ஆராய்ச்சி செய்தோமானால் அந்தப் பிரிவினை அத்தனையும் பலாத்காரத்தைத்தான் அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பது தெரியவரும்.

பலாத்கார ஆட்சி அழியும் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஏனெனில் பலாத்காரம் ஒழுக்க ஹீனர்களைத் தன்பால் இழுக்கும். கொடுங்கோல் மன்னர்களுக்குப் பிறகு பதவிக்கு வந்தவர்கள் அயோக்கியர்கள் தான் என்பதை காலம் நமக்கு நிரூபித்திருக்கிறது.

ஐரோப்பிய நாடுகளில் நடக்கும் ஜனநாயகம் தூற்றப் படுவதற்குக் காரணம் அந்த ஜனநாயகத்தின் அடிப் படைத் தத்துவமல்ல; இத் தத்துவத்தை சிலர் தவறு என்று சொல்லுகிறார்கள்; ஆனால், இதற்குக் காரணம் நமது அரசியல் தலைவர்களின் தடுமாற்றமும் கட்சிப் பித்தும்தான்.

நம்முடைய ஓய்வொழிச்சல் இல்லாத வாழ்க்கையில் நாம் மதிப்பிடக் கூடிய விஷயம் நமது தேசமல்ல. ஆனால் ஆக்கசக்தி நிரம்பியவர்களும் விஷயங்களைக் கிரகிக்கிறவர் களும்தான் நம் மதிப்புக்குரியவர்கள். அவர்களே கண்ணிய மான, மேன்மை தங்கிய, பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். அதே சமயத்தில் சாதாரண மனிதக் கூட்டம் ஒருவித எண்ணச் சுழற்றியு மில்லாமல் உணர்ச்சியற்று இருக்கிறது. மனித மந்தையின் உள்ளத்திலே உதிக் கின்ற கீழ்த்தரமான எண்ணத்தைப் பற்றி எண்ணத் தூண்டுகிறது. ராணுவ அணிவகுப்பில் பாட்டுக்கு ஏற்ப அடி எடுத்து வைத்து நடக்கும் மனிதன் என்னுடைய உதாசீனத்துக்கு ஆளாகிறான். அவன் தவறுதலாக அந்த அறிவைப்பெற்றவன். ஆகவே, அவனுக்குமுதுகெலும்பு அவசியத்திற்கும் மேற்பட்ட ஒன்றாகிறது. பிறரைப் பணியவைப்பதில் உள்ள வீரமும், அர்த்தமற்ற பலாத் காரமும் தேசபக்தி என்று படாடோபப் படுத்துவதை நான் எவ்வளவு வெறுக்கிறேன், தெரியுமா! யுத்தமென் பது வெறுக்கத்தக்க ஒரு கீழ்த்தரமான விஷயம். என்னைத்

துண்டு துண்டாக வெட்டினாலும் யுத்தத்தில் பங்கெடுத்துக்கொள்ளமாட்டேன்.

மனித வர்க்கத்தின் மீதுள்ள அப்படிப்பட்டகறையை தாமதமில்லாமல் துப்புரவாகத் துடைத்து அகற்ற வேண்டும். நாட்டைப் பற்றிய அறிவு, பத்திரிகை வாயிலாகவும் கட்சிகளின் மூலமாகவும் வியாபார ஆசையினாலும் அரசியல் காரணங்களுக்காகவும் களங்கப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. இல்லாவிட்டால் நெடு நாட்களுக்கு முன்னமேயே அந்தக் கறை அகற்றப்பட்டிருக்கும் என்று நான் திண்ணமாக எண்ணுகிறேன்.

சூக்ஷ்ம சக்தியை அனுபவிப்பதில்தான் உண்மையான அழகைக் காண்கிறோம். யாரிடத்தில் இந்த உணர்ச்சி வேகம் இல்லையோ, இதைக் கண்டவுடன் ஆச்சரியத்தினால் மூக்கின் மேல் விரல் வைத்து ரசிக்கவில்லையோ அவன் இருந்தும் இறந்தவனே; அவன் கண்கள் மூடியிருக்கின்றன. இந்த வாழ்க்கையின் அற்புதத்தை உணராத மனிதனின் உள்ளத்தில், பயமும் சேர்ந்துவிடவே அவன் கடவுள், மதம் என்றெல்லாம் உண்டாக்கி விட்டான். நம்முடைய மங்கிய அறிவைக் கொண்டு நாம் காணும் உலகத் தோற்றமே வளர்ச்சி பெறாத ஆரம்ப ஸ்திதியில்தான் இருக்கிறது. இந்த அழகைப் பிரமாதம் என்று நாம் ரசிக்கிறோம். ஆனால் மனித அறிவுக்கு எட்டாத அதி அற்புத சக்தியை பகுத்தறிய செய்யும் முயற்சிதான் உண்மையான சமயநெறி. இந்த அர்த்தத்தில்தான் நான் பக்தி வாய்ந்த சமய நெறியுடையவனாகிறேன்.

தம்முடைய படைப்பாகிய மக்களைத் தண்டிப்பவரும் போற்றிப் பரிசளிப்பவரும் ஆன கடவுளை என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. கடவுள் என்பவர்

சுருங்கச் சொன்னல் மனிதனுடைய தடுமாற்றத்தின் பிரதிபிம்பம். மனிதனுடைய உடல் அழிந்தவுடன் அவனுடைய ஆன்மா நிலைத்திருக்கிறது என்பதை நான் நம்பவில்லை. சிலர் பயத்தினலோ அல்லது, தான் என்கிற அகங்காரத்தினலோ அவ்வாறு எண்ணுகிருர்கள். மனித வாழ்வின் சூக்ஷ்ம சக்தி யுகம் யுகமாக இந்த அற்புதப் பிரபஞ்சத்தின் அமைப்பில் பிரதிபலிக்க பாடுபடுவதைப் பற்றிச் சிந்திப்பதே என் வேலை.

பன்மொழி பேசும் திரைப்படம்

நான்கு மொழிகள் பேசும் படத்தைத் திரையிடும் சாதனம் (புரஜக்டர்) ஒரு பிரிட்டிஷ் ஸ்தாபனம் தயாரித்திருக்கிறது. முதியோர் கல்வித் துறையிலும் காட்சி மூலம் கல்வி போதனைப் பிரிவிலும் பயன்படக்கூடிய இந்தச் சாதனம் அண்மையில் லண்டன் ஒலிம்பியாவில் நடந்த சர்வதேசப் புகைப்படச் சாதனங்கள் சந்தையில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பெற்றிருந்தது.

படத்தைப்பார்க்கிறவர்கள், ஹெட்போனை அணிந்து கொண்டு கேட்க விரும்பும் மொழியின் ஸ்விட்சைத் திருப்பினுல் ஒலியைக் கேட்க முடியும். லண்டன் காட்சியில் 'அணுப்பிளப்புக்கொள்கை' என்ற படத்தை திரையிட்டுக் காட்டினுர்கள். ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலி, ஆங்கில மொழிகளில் விளக்கவுரை பதிவு செய்யப்பட்டுள்ள இந்தப் படத்தை ஒரே சமயத்தில் நான்கு மொழி பேசுவோரும் பார்த்து (கேட்டு) மகிழ்ந்தார்கள்.

தலாய் லாமா

இந்தியா சுதந்திரமடைந்த பிறகு, நம் நாட்டில் தஞ்சம் புகுந்த பிறநாட்டுத் தலைவர்கள் இருவர். ஒருவர் நேபாள மன்னர்; மற்றொருவர் திபேத்தின் மதகுரு மன்னர் தலாய் லாமா.

திபேத் நாடு, இமாலயப் பிரதேசத்தில் உள்ளது. அதன் நிலப்பரப்பு நாலு லட்சத்து அறுபத்து மூவாயிரம் சதுர மைல். அதன் ஜனத்தொகை சுமார் நாற்பது லட்சம். தலைநகரம் லாஸா. அது பன்னிரண்டாயிரம் அடி உயரத்தில் உள்ளது. திபேத்தை "ரகசியங்கள் நிறைந்த நாடு" என்றும், "உலகத்தின் சிகரம்" என்றும் கூறுவார்கள்.

திபேத்திலுள்ள மக்கள் அனைவரும் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். அந்நாட்டிலுள்ள ஆண்களில் மூன்றில் ஒரு பங்கினர் பௌத்த சந்நியாசிகள்.

திபேத்திலுள்ள முக்கியமான மூன்று மடங்களில் மட்டும் இருபதாயிரம் பௌத்த சந்நியாசிகள் வசிக்கிறார்கள்.

தலைநகரான லாஸாவின் ஜனத்தொகை சுமார் ஐம்பதாயிரம். திபேத் நாட்டுத் துருப்புக்களின் எண்ணிக்கை சுமார் ஐயாயிரம்.

திபேத்தின் செல்வம், லாமாக்கள் மடத்திலும் சில நூற்றுக்கணக்கான பிரபுக்களின் குடும்பங்களின் கையிலும்தான் இருந்து வந்தது. ஒரு சில வியாபாரிகளைத்

தவிர, மற்றவர்கள் விவசாயிகளும், ஆடுமாடுகளை மேய்த்து ஜீவனம் செய்கிறவர்களும்தான். மக்கள் திருப்தியோடு சந்தோஷ வாழ்க்கை நடத்துகின்றனர். விருந்தோம்பிலில் சிறந்தவர்கள். விருந்தினர்கள் எதிரில் உரக்கக்கூடப் பேசமாட்டார்கள்

எல்லோரும். நிரம்பிய மதப்பற்று உடையவர்கள். இதற்கு ஓர் உதாரணம் சொல்ல வேண்டுமானால், மரங்களில், அல்லதுகற்பாறைகளில்,அல்லதுஎந்த இடங்களைப் பார்க்கிறார்களோ அந்த இடங்களில் "ஓம் மணிபத்மே ஹூம்" என்று எழுதிவைக்கிறார்கள். இப்படிப்பல தடவை பல இடங்களில் எழுதிவைத்தால் நல்லது என்று இவர்கள் நம்புகிறார்கள்.

இப்பொழுது இந்தியாவுக்கு வந்து முஸோரியில் தங்கியிருப்பவர் பதினான்காவது தலாய் லாமா. இவருக்கு வயதுகுமார் இருபத்தாறு. இவருக்கு முன்னிருந்த பதின் மூன்றாவது தலாய் லாமா, 1933-ஆம் ஆண்டில் தமது ஐம்பத்து நான்காவது வயதில் காலமானார். உடனே சம்பிரதாய முறைப்படி, இவருக்கு அடுத்தப்படியாக பட்டத்துக்கு வரவேண்டிய தலாய் லாமா எங்கே பிறந்திருக்கிறார் என்று கண்டுபிடிக்கும் வேலையைத் தொடங்கினர். தலாய் லாமாவைக் கண்டுபிடிக்க இரண்டு வருஷங்கள் ஆயின.

தற்பொழுதுள்ள தலாய் லாமா கண்டு பிடிக்கப்பட்ட வரலாறு விசித்திரமானது. பல இடங்களில் தேடி, கடைசியில் வட கிழக்குப் பகுதியில்தான் தலாய் லாமா பிறந்திருக்கவேண்டுமென்று திபேத்திய அதிகாரிகள்,சில அறிகுறிகளால் தெரிந்து கொண்டனர். அப்படியே வட கிழக்குப்பகுதிக்கு ஓர் தூதுக்கோஷ்டி சென்று பல இடங்களில் பரிசோதனை செய்தது. ஓரிடத்தில் ஒரு குடியானவன்

வசித்துக்கொண்டிருந்தான். அவன் பெயர் சோக்சூ ஸெரிங். அவன் குடிசைக்குள் மேற்படி தூதுகோஷ்டியினர் சென்று, அவனுடைய குழந்தையைக் கண்டனர். அதனிடத்தில் மிகச் சிறந்த அம்சங்கள் இருப்பதைக் கண்டனர். பழைய தலாய் லாமாவினால் உபயோகிக்கப் பெற்று வந்த சில சாமான்களைத் தூதுகோஷ்டியினர் தம்முடன் கொண்டு வந்திருந்தனர். அவைகளோடு, அவைகள் மாதிரி செய்யப்பெற்றிருந்த சில போலிச் சாமான்களையும் கொண்டுவந்திருந்தனர். அந்த இரண்டு தினுசு சாமான்களையும் கலந்து மேற்படி குழந்தையின் முன்னிலையில் வைத்தனர். அந்தக் குழந்தை, போலிச் சாமான்களை விட்டுவிட்டு, உண்மையான சாமான்களில் ஒரு பிரம்பையும், இரண்டு கழுத்து ஆபரணங்களையும் எடுத்துக்கொண்டது. உடனே, அடுத்த தலாய் லாமா இந்தக் குழந்தைதான் என்று மேற்படி தூதுக் கோஷ்டியினர் நிச்சயித்தனர். பிறகு குழந்தையின் அங்க அவயவங்களைப் பரிசோதனை செய்தனர். எல்லாம் ஏறக்குறையச் சரியாய் இருந்தது. கடைசியில், குழந்தையின் பெற்றோர்களுக்கு, ஏராளமான திரவியத்தைக் கொடுத்துவிட்டு லாஸாவுக்கு அழைத்து வந்தனர்.

அதுமுதற் கொண்டு, தமது உயர் பதவியை வகிப்பதற்கு அனுகூலமாக என்னென்ன பயிற்சிகளைப் பெற வேண்டுமோ, அந்தப் பயிற்சிகளை எல்லாம் இந்தக் குழந்தை பெற்று வந்தது. இக் குழந்தை பெற்று வந்த கல்வி மதக் கல்வியே யாகும். தலாய் லாமா திருமணம் செய்து கொள்ளக் கூடாது.

1956-ஆம் ஆண்டில், புத்தர்பிரான் தோன்றிய 2500 வது ஆண்டு விழாவை, மற்ற சில நாடுகளைப் போல இந்தியாவும் சிறப்பாகக் கொண்டாடியது. அவ்விழாவுக்கு

இந்தியாவின் விருந்தினர்களாக தலாய்லாமாவும் பஞ்சன் லாமாவும் நம் நாட்டுக்கு வந்தனர். தலாய் லாமாக்களில் ஒருவர் இந்தியாவுக்கு வந்தது அதுவே முதன் முறை,

பஞ்சன் லாமா என்பது ஒரு பதவி. அவ்வார்த்தை யின் பொருள் "மதிப்புக்குரிய ஆசிரியர்" என்பது. பதி ஞேருவது நூற்ருண்டிலிருந்து இப்பதவி இருந்து வரு கிறது. தற்பொழுது பஞ்சன் லாமாவாக இருப்பவரின் வயது இருபத்து மூன்று. பஞ்சன்லாமாவையும் புத்தரின் அவதாரம் என்று மக்கள் கருதுகிருர்கள். ஆதலால் திபேத்தியர்களுக்கு இவரிடத்தும் பக்தியும் மதிப்பும் உண்டு. ஷிகாட்ஸே என்ற இடத்தில் இவருக்குத் தனி மடாலயம் உண்டு. ஆனல் அரசாங்க அதிகாரம் எல்லாம் தலாய் லாமாவிடம்தான்.

திபேத், தனி ராஜ்யமாக இருந்தாலும், அரசியலில் அது சீனுவின் பாகமாவே கருதப்பெற்று வந்திருக்கிறது. சீனுவிலே உள்நாட்டுச் சண்டைகள் அடிக்கடி மூண்ட தால் திபேத்மீது அவர்களுடைய ஆதிக்கம் வலுபெற வில்லே. சீனுவில் கம்யூனிஸ்டு அரசாங்கம் தோன்றி யது திபேத்தில் ஆதிக்கம் செய்ய விரும் பியது. சீன அரசாங்கத்துக்கும் தலாய் லாமாவுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த விவரத்தையும் பின்னர் நடந்ததையும் தலாய் லாமாவின் அறிக்கையே கூறட்டும் :—

தலாய் லாமா அறிக்கை

சீன மக்களிடமிருந்து திபேத்தியர்கள் மாறுபட்டவர் கள் என்பது ஒப்புக்கொள்ளப் பெற்ற விஷயம். திபேத் மக்களிடம் சுதந்திர ஆர்வம் பலமாக வேரூன்றியிருக் கிறது. பல தடவைகளில் இந்த ஆர்வம் வெளித்தோன்றி யிருக்கிறது என்பது சரித்திர பூர்வமான உண்மை. சில

சமயங்களில் சீனு தனது ஆதிபத்திய உரிமையை நிர்ப்பந்தமாகத் திணித்திருக்கிறது; சில சமயங்களில் அது சுதந்திர நாடாக இயங்கியது.

எந்த நிலையிலும், சீனுவின் ஆதிகத்தின் கீழ்கூட, திபேத் தனது உள்நாட்டு விஷயங்களில் பூரண சுயேச்சையுடன் இருந்து வந்திருக்கிறது.

1951-ஆம் ஆண்டில் சீன அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்தின் பேரில் சீனுவுக்கும் திபேத்துக்கு மிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் சீனுவின் ஆதிபத்திய உரிமை அங்கீகரிக்கப்பெற்றது. ஏனெனில் திபேத்தியருக்கு அதைத் தவிர வேறு வழியில்லாமலிருந்தது. ஆனுல் திபேத்துக்குப் பூரண சுயாட்சி உண்டு என்று அந்த ஒப்பந்தம் தெளிவாகக் கூறியிருக்கிறது. அயல் நாட்டு விஷயங்கள் மட்டும் சீன அரசாங்கத்தினிடம் இருக்கவேண்டும்; திபேத்தின் மதம், பழக்கவழக்கள், உள்நாட்டு நிர்வாகம் போன்றவைகளில் சீன அரசாங்கம் தலையிடுவதில்லை என்பது ஒப்பந்தத்தின் சிலஅம்சங்கள். உண்மையில் நடந்தது என்ன வென்ருல் சீன ராணுவம் திபேத்தையும் எடுத்துக்கொண்டபின்னர், உள்நாட்டு விஷயங்களில்கூட சுயாட்சி பறிக்கப்பெற்றுவிட்டது. திபேத்தின் விவகாரங்களில் சீன அரசாங்கம் முழு அதிகாரம் செலுத்தத் தொடங்கிவிட்டது.

1957-ஆம் ஆண்டில், தலாய் லாமா தலைமையில் ஆயத்தக் குழு நிறுவப்பெற்றது. பஞ்சன் லாமா உப-தலைவராகவும், சாங்கூஹா சீன அரசாங்கப்பிரதிநிதியாகவும் நியமிக்கப் பெற்றனர். நடைமுறையில் இந்தக் குழுவினருக்குக்கூட அதிக அதிகாரம் கிடையாது. எல்லா முக்கியமான விஷயங்களிலும் சீன அதிகாரிகள்தான் முடிவு செய்தனர். 17 அம்ச ஒப்பந்தப்படி செயல்புரிய

திபேத் அரசாங்கமும் தலாய் லாமாவும் முயன்றனர். ஆனால் சீன அதிகாரிகளின் தலையீடு நிற்கவில்லை.

1955-ஆம் ஆண்டின் இறுதியில் கான் மாகாணத்தில் போராட்டம் ஆரம்பமாயிற்று. 1956-ஆம் ஆண்டில் அது பெரிதாய் வளர்ந்துவிட்டது. மோதல்களில் சீன ஆயுதப் படையினர் ஏராளமான பௌத்த மடங்களை அழித்தனர். பல லாமாக்கள் கொல்லப்பட்டனர். ஏராளமான பௌத்த சந்நியாசிகளையும், திபேத்திய அதிகாரிகளையும் சீனாவுக்குக் கொண்டுபோய் அங்கு சாலை அமைக்கும் வேலையில் அமர்த்தினார்கள். மத விஷயங்களில் தலையீடு அதிகரித்தது. மத சுதந்திரம் ஒடுக்கப்பட்டது.

1959-ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து பரஸ்பர உறவு பெரிதும் சீர்கெட்டுவிட்டது. இதுவரை புகைந்து கொண்டிருந்த மனக்கசப்பு 'வெடித்து' விட்டது.

சீன தலைமைக் காரியாலயத்தில் ஒரு கலை நிகழ்ச்சியில் கலந்துகொள்ள தலாய் லாமா முன்கூட்டியே ஒப்புக் கொண்டிருந்தார்கள். அந்நிகழ்ச்சி மார்ச் மாதம் பத்தாம் தேதி நடைபெறும் என்று திடீர் அறிவிப்பு வந்தது. லாஸாவில் உள்ள மக்களுக்கு அச்சம் ஏற்பட்டுவிட்டது. தலாய் லாமாவுக்குத் தீங்கு நேரும் என்று அவர்கள் பயந்தார்கள். தலாய் லாமாவின் கோடைகால மாளிகை எதிரே பத்தாயிரம் திபேத்தியர்கள்கூடி தலாய் லாமாவை அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் செல்ல முடியாதபடி தடுத்தார்கள்.

தலாய் லாமாவைப் பாதுகாப்பதற்காக மக்களே மெய்க்காப்பாளர் கோஷ்டியை ஏற்படுத்தினர். சீன ஆட்சியை எதிர்த்துப் பெரிய கூட்டத்தினர் தெருக்களில் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தனர். இரு தினங்

களுக்குப்பின் ஆயிரக் கணக்கான பெண்களும் ஆர்ப் பாட்டம் செய்தனர்.

மக்களின் ஆர்ப்பாட்டம் ஒரு புறமிருக்க, பரஸ்பர உறவைப் பாதுகாப்பதற்காக தலாய் லாமாவும் அவருடைய சகாக்களும் எல்லா முயற்சிகளும் செய்தனர். மக்களின் பயத்தைப் போக்கி, அமைதியான நிலைமை ஏற்படுத்தும் பொருட்டு, சீன அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த தலாய் லாமா கோஷ்டியினர் முயன்றனர்.

பேச்சு வார்த்தைகள் ஒரு புறம் நடக்க, மறு புறம் சீனர்கள் சீனுவிலிருந்து ஏராளமான படைகளைத் தருவித்து திபேத்திலுள்ள சீனப்படைகளைப்பெருக்கினுர்கள். தலாய் லாமா அரண்மனையை நோக்கி மார்ச் மாதம் பதினேழாம் தேதி எரிகுண்டுகள் வீசினுர்கள். தெய்வாதீனமாக, அந்தக்குண்டுகள் பக்கத்திலுள்ள ஒரு குட்டையில் விழுந்தன.

நிலைமை மிகவும் மோசமானதை, தலாய் லாமாவின் ஆலோசகர்கள் உணர்ந்தார்கள். தலாய் லாமாவின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று கருதினுர்கள். இந்நிலை தலாய் லாமாவும், அவர் குடும்பத்தினரும், அதிகாரிகளும் லாஸாவிலிருந்து கிளம்புவது அவசியமாயிற்று. தலாய் லாமா சொந்தவிருப்பத்தின் பேரில்தான் லாஸாவிலிருந்து இந்தியாவுக்கு வந்திருக்கிருர். இதை அவர் தெளிவாக உலகத்துக்குத் தெரிவிக்க விரும்புகிருர். அவர் நிர்ப்பந்தத்தின் பேரில் இங்கு வரவில்லை.

மிகவும் சிரமமான பாதைகளைத் தாண்டி இங்கு பத்திரமாக வந்து சேர்ந்ததற்கு அவருடைய மக்களின் ஆதரவும், அன்பும், விசுவாசமுமே காரணம். பெரிய

பெரிய நதிகளைக் கடந்து வரவேண்டியதாயிற்று. இன்னும் பல கரடுமுரடான, பல சிரமங்கள் நிறைந்த பாதைகளைக் கடக்க வேண்டியிருந்தது.

திபேத்தில் நடந்த தேசீய எழுச்சியைக் குறித்தும் தலாய் லாமா இந்தியாவில் தஞ்சம் புகுவது குறித்தும் இந்தியப் பிரதமர் ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு லோக சபையில் தெரிவித்தார்.

திபேத்தில் நடந்தது தேசீய எழுச்சி அல்லவென்றும், சுயநலமுள்ள கலகக்காரர்களின் செயலே என்றும், எப்படி யிருந்த போதிலும், திபேத், சீனுவின் உள்நாட்டுவிவகாரம் என்றும், அதில் இந்தியா தலையிடக் கூடாது என்றும், நாடு பிடிக்கும் ஆசையுள்ள சில இந்தியர்கள் திபேத்தைப் பற்றித் தவருகப் பிரசாரம் செய்கின்றனர் என்றும் சீனப்பிரதம மந்திரி சூ என்லாய் கூறினுர். சீனத் தலைவர்களும், சீனப்பத்திரிகைகளும் இந்தியாவை ஒரு முகமாகத் தாக்கின. சீன அரசாங்கத்தின் கூற்றை மறுத்து ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு லோக சபையில் மீண்டும் பேசினுர்.

இதுவரை திபேத்திலிருந்து இந்தியாவுக்கு வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை 12,200. அவர்களில் 280 பேர் பெண்கள்.

கோழிப் பண்ணை

இந்தியாவில் வர்த்தக ரீதியில் கோழிப் பண்ணை நடத்துவது லாபகரமாக இருக்குமா?

ஹைதராபாத்திற்கு அருகே ராஜேந்திர நகரில் இருக்கும் கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை, இந்தக் கேள்விக்கு பதிலளிக்க இப்பொழுது முயன்று வருகிறது.

இந்த முயற்சியில் இந்தியாவிலிருக்கும் அமெரிக்கத் தொழில் நுட்ப ஒத்துழைப்புக் குழுவும் ஒத்துழைத்து வருகிறது.

கட்டுப்பாடு செய்யப்பட்ட சூழ்நிலையில் ஒவ்வொரு ஆண்டிலும் மூன்று தொகுப்புகளில் 2000 கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்ய ராஜேந்திர நகரில் இப்பொழுது திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. இவ்வளவு பெரிய அளவில் பரீட்சார்த்த கோழிப் பண்ணை நடந்து வது இந்தியாவிலேயே இதுதான் முதலாவதாகும்.

இதே கட்டிடத்தில் 2000 கோழிக் குஞ்சுகள் கொண்ட யூனிட்டுக்கு குஞ்சுபொறிக்கும் இடம் கட்டுவதில் ஏற்படும் பொருளாதார அம்சங்களைப் பற்றி, இந்தத் திட்டத்தின் கீழ் ஆராய, யோசனை செய்யப்பட்டுள்ளது. பெரிய குஞ்சு பொறிக்கும் இடம் ஒன்று இப்பொழுது கட்டப்பட்டு வருகிறது. இதில் பிறந்து ஒரு நாளான விசேஷ இன கோழிக் குஞ்சுகள் வளர்க்கப்படும். இந்தக் கோழிக் குஞ்சுகள், ஆராய்ச்சித் திட்டத்தில் பயன்படுத்தப்படும். இந்த இன விருத்திக்கான கோழிகள் இரண்டு ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவிலிருந்து வரவழைக்கப்பெற்றன.

அமெரிக்கக் கோழிப் பண்ணை நிபுணர் ஸ்ரீ எர்ல் என் மூர் இந்தத் திட்டத்தை மேற்பார்வை செய்கிறார். கான்ஸாஸ் ராஜ்யக் கல்லூரி நிபுணர்கள் குழுவில் ஒருவர் ஸ்ரீ மூர். அவருடன் மூன்று இந்திய நிபுணர்கள் நெருங்கி ஒத்துழைக்கின்றனர். அமெரிக்கத் தொழில் நுட்ப ஒத்துழைப்புக் குழுவின் ஆதரவில், இந்த நிபுணர்கள் மத்திய இந்தியாவில் விவசாய கால்நடை கழகங்களுடனும், இலாகாகளுடனும் ஒத்துழைக்கின்றனர்.

அமெரிக்காவில் ஆராய்ச்சியிலும் போதனையிலும் விசேஷ அனுபவம் பெற்றிருக்கிறார் ஸ்ரீ மூர். தமது விரிவான அனுபவத்தின் பேரில், ராஜேந்திர நகர் திட்டத்தை அவர் விவாதிக்கையில், கோழி வாத்து முதலியவைதான் அவற்றிற்கு அளிக்கப்படும்தானியம் முதலியவற்றை, மனிதனுக்குச் சிறந்த உணவாக மாற்றித் தருகிறது; இந்தியாவில் வழக்கமாக இருக்கும் அரிசிச் சோறு உணவுக்கு முட்டைகள் மிகச் சிறந்த உப உணவாக அமையும் என்றார். கோழி வாத்து உற்பத்தியில் இருக்கும் அனுகூலங்களையும் அவர் விவரித்தார். இட வசதி சுருக்கமாக இருந்தால் போதும், ஆரம்பத்தில் முதலீடும் அதிகம் வேண்டியதில்லை; விரைவில் பலன் கிடைக்கக்கூடியது; குடும்பத்திலுள்ளவர்களையே இதில் உழைக்கப் பயன்படுத்திக் கொள்ள முடியும்; இவையெல்லாம் இதிலுள்ள அனுகூலங்களாகும்.

இந்த நாட்டில் கோழி வளர்ப்பு முறைகளைப் பற்றி இந்த அமெரிக்க நிபுணர்பிரஸ்தாபிக்கையில், கீழ்க்கண்ட கண்ட சில அபிவிருத்தி நடவடிக்கைகளை அவர் பிரேரணை செய்தார். அவர் கூறியதாவது.

"அன்று பிறந்த கோழிக் குஞ்சுகளை வாங்கும்படி, கோழிப் பண்ணைக் காரார்களுக்கு உற்சாக மூட்ட

வேண்டும். அதிகப்பட்ச லாபம் கிட்டவேண்டுமானால் செயற்கை உற்பத்தி முறைகளை அவர்கள் கற்றுக் கொள்ளவேண்டும்.

கோழி வாத்துப் பண்ணைகளும், தனியார் தொழிலும் கோழி வாத்து முதலியவற்றிற்கு நல்ல உணவுகளை தயாரிப்பதில் தீவிரமாக ஈடுபட வேண்டும். ஏனெனில் கோழி வாத்து முதலியவற்றிற்கு உணவு சரியான முறையில் தயாரித்து விநியோகம் செய்யும் ஏற்பாடு குறைவாகவே இருக்கிறது.

இலவசமாகக் கிடைக்கும் கால் நடை வைத்திய வசதியை கோழி வாத்துப் பண்ணைக்காரர்கள் பயன்படுத்திக்கொள்ள உற்சாகமூட்டுவதற்கு விளக்கமானபோதனையும் அவசியமாகஇருக்கிறது. இப்பொழுது அனுபவத்தில் இருந்துவரும் அளவுக்கு மிஞ்சிய நஷ்டத்தைக் குறைக்க நோய் நொடி கட்டுப்பாட்டில் ஆராய்ச்சியும், விளக்கிக் காட்டுவதும் அவசியமாக இருக்கிறது.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18

கவுண்டர் & கம்பெனி
(பிரைவேட்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்:
கூட்ஸ் ஷெட் ரோடு
பொள்ளாச்சி.

கிளை ஆபீஸ் & ஷோரும்
7/69, ஜெயில் ரோடு
கோயமுத்தூர்

கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:

டாடா-மெர்சிடெஸ்-பென்ஸ் டீசல் டிரக்,
ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்
விற்பனையாளர்கள்.

நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,
மானேஜிங் டைரக்டர்.

KUMARI MALAR REGD.NO. M. 4819

குமரி மலர் வெளியீடுகள்

1.	மலேயா முதல் கானடா வரை	ரூ. 2 – 50
2.	அமெரிக்க நாட்டில்	” 5 – 00
3.	கரிபியன் கடலும் கயானாவும்	” 4 – 00
4.	உலகம் சுற்றும் தமிழன்	” 2 – 00
5.	பிரயாணக் கட்டுரைகள்	” 1 – 50
6.	அண்டை நாடுகள்	” 0 – 90

வெளிவந்துவிட்டன.

ஐரோப்பா வழியாக

விரைவில் வெளிவரும்.